DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1436 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 13, 2023

# கனடா— ஸ்காபுறோ நகரில் மூன்று மேடைகளில் பாடி மகிழ்விக்க வந்துள்ள தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம்



இவ்வார இறுதியிலும் அதையடுத்து வரும் வார இறுதியிலும் கனடா-ஸ்காபுறோ நகரில் நடைபெறும் மூன்று விழாக்களில் ரசிகர்களை பாடி மகிழ்விக்க உள்ள தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது மேற்படி மூன்று விழாக்களையும் ஏற்பாடு செய்திருக்கும் ஏற்பாட்டாளர்கள் மற்றும் அனுசரணை வழங்கும் வர்த்தக நண்பர்கள் அவரை வரவேற்றார்கள்.

எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோ குயின்பெலஸ் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ள **EETTV** யின் **KIDS OF TAMILS** விழாவிலும் மறுநாள் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பத்திரிகையின்பல்சுவைக் கலை விழா"விலும் அதனைத் தொடர்ந்து 21-10-2023 அன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள "பைரவி நுண்கலைக் கல்லுரியின் ஆண்டு விழாவிலும் தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம் இனிய பாடல்களை எமக்குத் தரவுள்ளார்.

ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பல்சுவைக் கலை விழா" வில் நடனம் நகைச்சுவை கவிதா அரங்கு மற்றும் "ஆரோசை" இசைக் குழுவினர் நீண்ட மெல்லிசை நிகழ்ச்சி.

இதில் "பொன்னியின் செல்வன்" புகழ் வி. எம். மகாலிங்கம் சிறப்புப் பாடகராக தோன்றுகின்றார்.

"உதயன் பல்சுவைக் கலை விழா"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் மிழர் வர்த்தக நிலையங்கள்

1.கென்னடி-எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனத்தில். தொலைபேசி :416 298 1598

2. மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்பில் அமைந்துள்ள **Majestic City** வர்த்தக வளாகத்தில் **Imma Trading Company-**தொலைபேசி: 416 609 0827.

3. கென்னடி-எக்ளிங்டன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில். தொலைபேசி: 416 759 4916

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE
Acupuncturist Mrs. K. Vsanthakumar
இடமாற்றம் பற்றிய அறிவித்தல்
இதுவரை காலமும் Kennedy & Finch சந்திப்புக்கு அருகில் இயங்கிவந்த மேற்படி அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் தற்போது புதிய இடத்தில் பின்வரும் விலாசத்தில் இயங்கிவருகின்றது:
5200 Finch Ave. East. Suit 349, Scarborough, ON M1S 4Z5 Tel: 416 754 4024

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com



Latika Productions
லதிகாவின்
SAINDHAVI & UNNI MENON
LIVE IN CONCERT
21st OCTOBER | CANADA EVENT CENTRE, WHITBY
TICKETS
From $30 I VVIP $300
GATES OPEN
5.00 PM
A R Reihana
Saindhavi
Ramya Nambisan
Unni Menon
Vijay
Kiki
Anu Anand
Sridhar sena
Aravind
Madhan Band
TICKET BOOKINGS OPEN NOW
tickets.rescounts.com
Latika Gold House
Contact: 647-996-5922 /416 423 7555
2900 Markham Rd Unit L7, Scarborough, ON M1X 1E6
Sponsorship Opportunity Available
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.

## உதயன் கதிரோட்டம்

# ஆயுத உற்பத்தி அதிகரிப்பின் உயர்வு தான் உலக நாடுகளுக்கிடையில் மோதல்கள் காரணமா?

எமது தாயகத்திலே அரவணைப்போர் என்று எவரும் இன்றி அனாதரவாகவும் நிற்கதியாகவும் போரின்தா பாறை பொடியாய்ப் போகாதோ" இப்படிக்கு நிவாரணத் தாயின் சிறுத் தொண்டன் க.இராசநாதன் 'கோவிட் நோயின் தொற்றானது இன்றிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முழு உலகையுமே குறிவைத்து தாக்கியபோது உலக மக்கள் நடுங்கிப் போனர்கள். நோய் வடிவில் உலகத்தை தாக்கும் ஒரு யுத்தம் போன்றே எண்ணி பலர் நடுங்கியும் போனார்கள்.

கோவிட் தொற்றின் தாக்கம் தணிந்து போக உலக நாடுகள் பலவற்றுக்கும் இடையில் 'சிறு சிறு உரசல்கள்' தோன்றுவதும் மறைவதுமாக இருந்து வந்தன. அவற்றுள் கனடா, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் உரசல்கள் உரம் பெற்று வந்தாலும் இரு நாட்டு பிரதமர்களின் நட்பான உரையாடல்களால் அவை தணிந்து வந்தன.

அதனைத் தொடர்ந்து ரஸ்யாவின் உக்கிரேன் மீதான தாக்குதல்கள் அதிகரிக்க மேற்குலக நாடுகளும் ஆடிப்போயின. சில அண்டை நாடுகளும் இந்த இரு நாட்டு மோதல்களால் தங்கள் பொருளாதாரத்தை இழக்கும் அதே வேளை தமது நாட்டு மக்கள் பல இழப்புக்களை எதிர்கொள்வதாகவும் ஜேர்மனி போன்ற நாடுகள் 'புலம்பத் தொடங்கின' இவ்வாறான இந்த ரஸ்ய-உக்கிரேன் யுத்தத்தில் ரஸ்யாவிற்கு எதிராக இங்கிலாந்து. அமெரிக்கா கனடா போன்ற நாடுகள் விமர்சனங்களை முன்வைத்து வந்த அதே வேளையில் உக்கிரேன் நாட்டுக்கு ஆயுதங்களையும் தளபாடங்களையும் பகிரங்கமாக வழங்கி வந்தன.

இவ்வாறான நிலையில் கனடா-இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர உறவுகளில் மந்த நிலை ஏற்படும் வகையில் இரு நாட்டுத் தலைவர்களும் ஒவ்வொருவர் மீது குற்றச்காட்டுக்களை முன்வைக்கத் தொடங்கினார்கள்.

சில சீக்கிய அமைப்புக்களின் கிளைகள் கனடா போன்ற நாடுகளில் இயங்கிவருவதைச் சுட்டிக்காட்டி இந்தியா கனடா மீது குற்றச் சாட்டுக்களை வைத்த அதேவேளை கனடாவில் காலிஸ்தான் தனிநாடு கேட்டுப் போராட்டத்திற்கான திட்டங்களை இயற்றும் குழுவினர் கனடா போன்ற நாடுகளில் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இவ்வாறான நிலையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. கடந்த சனியன்று ஹமாஸ் அமைப்பினர் தென் இஸ்ரேலுக்குள் ஊடுருவி மேற்கொண்ட திடீர்த் தாக்குதலைத் தொடர்ந்து இந்த யுத்தம் ஆரம்பமானது. இந்த யுத்தநிலையைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நிலைமை கொதிநிலையை அடைந்துள்ளது. இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடிகளும் தாக்கங்களும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

ஏற்கனவே உக்ரைன்- ரஸ்யா போர் வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கின்றது. அதேநேரம் முழு உலகிற்கும் பெரிதும் சவாலாக விளங்கிய கொவிட் 19 பெருந்தொற்றும் இந்நாடுகளின் பொருளாதாரத்தில் பெரிதும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் உலக நாடுகளுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயுவை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது யுத்தம் மூண்டிருக்கின்றது. இந்த யுத்தம் ஏற்கனவே பொருளாதார ரீதியில் அழுத்தங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்துள்ள வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு மேலும் தாக்கங்களை ஏற்படுத்தவே வழிவகுக்கும். அதன் காரணத்தினால் இது தொடர்பில் உலகளாவிய பொருளாதார நிபுணர்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

குறிப்பாக எரிவாயு மற்றும் எரிபொருள் விலையில் கடுமையான தாக்கம் ஏற்பட இந்த யுத்தம் வழிவகுக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான சூழலில் மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் உயரத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் வெளியான தகவலின்படி மசகு எண்ணெய் விலையில் ஐந்து சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த யுத்தநிலை நீடிக்குமாயின் எரிபொருட்களின் விலைகளில் நீண்ட கால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதையும் இப்பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதனால் இலங்கையிலும் எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆனால் இம்மாதத்தின் முதலாம் திகதி இந்நாட்டில் எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டமை தெரிந்ததே.

உலக மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் வேண்டுகோளும் இதுவாகவே உள்ளது. ஏனெனில் எந்தவொரு யுத்தமும் அழிவுகளையும் சேதங்களையும் இழப்புக்களையுமே கொண்டு வருமேயொழிய மக்களுக்கு நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய ஒன்றல்ல. அதனால் இந்த யுத்தநிலையும் இலங்கை போன்ற வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும்.

கொவிட் 19 பெருந்தொற்று, உக்ரைன் – ரஸ்யா போர் என்பன ஏற்கனவே வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் பெரிதும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவ்வாறான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் இலங்கையும் கூட முகம்கொடுத்தது. அந்தத் தாக்கங்களில் இருந்து எந்தவொரு நாடும் இன்னும் முழுமையாக மீட்சி பெற்றிடவில்லை. அதற்கிடையில் மற்றொரு யுத்தம் ஏற்பட்டிருப்பது உலகின் பலரதும் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. அதிலும் எரிபொருள், எரிவாயு உற்பத்தி பிராந்தியத்தில் இந்த யுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவற்றின் விலைகளில் நீண்ட கால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்த யுத்தம் காரணமாக வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகள் பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளக்கூடிய தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இம்மோதலை நிறுத்துவதைத் தவிர வேறுவழியில்லை.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703

4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2

website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மார்க்கம் நகரில் 'ராஜகீதம்ஸ் பொன்மாலைப் பொழுது' இசை நிகழ்ச்சிக்காக கனடா வந்துள்ள 'சுப்பர் சிங்கர்' புகழ் பூஜா




நாளை சனிக்கிழமை 14ம் திகதி மார்க்கம் நகரில் அமைந்துள்ள மிடில்பீல்ட் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள 'ராஜகீதம்ஸ் பொன்மாலைப் பொழுது' இசை நிகழ்ச்சிக்காக கனடா வந்துள்ள 'சுப்பர் சிங்கர்' புகழ் பூஜாவிற்கு விமான நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பெற்றது.

7 நோட்ஸ் இசைக்குழுவின் பின்னணி இசையில் உள்ளூர்ப் பாடக பாடகிகளோடு ராஜகீதம் நிறுவனர் ரிஎம்எஸ் தெய்வேந்திரம் மற்றும் சுப்பர் சிங்கர் புகழ் பூஜா இனிமையான பாடல்களை வழங்கவுள்ளார்.

இங்கே காணப்படும் படத்தில் திரு. திருமதி தெய்வேந்திரம் தம்பதி பாடகி பூஜாவிற்கு பொன்னாடை அணிவித்து வரவேற்பதை காணலாம்.

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

**416-706-8160**

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

Cobourg நகரத்திலும் Downtown Toronto விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு Cook மற்றும் Kitchen Help ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. Cobourg நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
416 294 7887

**முதியவர் ஒருவரை பராமரிக்க பெண் தேவை**

MARKHAM & SHEPPARD பகுதியில் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமைத்துக் கொடுப்பதற்கும் பெண் ஒருவர் அல்லது **Middle age couple** தேவை. தங்குவதற்கு அறையும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 437-553-9705

**DISWASHER தேவை**

**14th Ave./ Birchmount** சந்திக்கு அருகில் உள்ள கனேடிய உணவகத்திற்கு **DISWASHER** ஒருவர் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு :

**NICK - 905 477 1161**

**ஸ்காபுறோவில் Saree Blouse Cutting Classes**

இலங்கையில் தையல் துறையில் பலவருட அனுபவமுள்ள பெண் **(Tailor)** ஒருவரினால் நியாயமான விலையில் சேலைக்கு சட்டை **(Saree Blouse)** தைத்துக் கொடுப்பதோடு, சேலைக்கு சட்டை தைப்பதற்கான வகுப்புகளும் **(Saree Blouse Cutting / Classes Ellesmere** - மற்றும் **Scarborough** நகரிலும் **(Centennial/ Community Centre - Markham & Ellesmere - 1967 Ellesmere Road)**லும் நடத்தப்படுகின்றது.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்:
தர்மா - 437-833-2660 905-268-0272

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# தேசிய ரீதியில் கட்டுரைப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி இரண்டாம் இடம்



2023 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக பாடசாலைக்களுக்கிடையில் நடாத்தபட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பங்கு பற்றிய, யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 10ம் தரத்தில் கல்வி கற்கும் ஹர்ணவி பகீரதன் என்ற மாணவி தேசிய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவருக்கான பணப்பரிசு கேடயம் மற்றும் சான்றிதழ் கடந்த வாரம் பத்தர முல்லவில் நடைபெற்ற உலக வதிவிட தின நிகழ்வில் பிரதம மந்திரி அவர்களால் வழங்கப்பட்டது.



# யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை இடையை சேவையில் ஈடுபடவுள்ள கப்பலின் சோதனை ஓட்டம்

இலங்கை மற்றும் இந்தியா இடையேயான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் அக்டோபர் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு இடையை சேவையில் ஈடுபடவுள்ள குறித்த கப்பலின் சோதனை ஓட்டம் 08.10.2023 அன்று இடம்பெற்ற நிலையில், மதியம் 1:45 மணியளவில் யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையை வந்தடைந்தது. இவ்வாறு வந்தடைந்த கப்பல் 10ஆம் திகதி பயணிகளை ஏற்றியவாறு இந்தியா - நாகபட்டினம் நோக்கி பயணிக்கவுள்ளது.



கப்பலில் 150 பயணிகள் பயணம் செய்யமுடியும் என்பதுடன் இரு வழி பயணக் கட்டணமாக 53,500 ரூபாயும் ஒரு வழி பயணக் கட்டணமாக 27,000 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

# இலங்கை பாடசாலைகள் காற்பந்தாட்ட போட்டியில் 20 வயது பிரிவில் வரலாற்று சாதனை படைத்தது சென் பற்றிக்ஸ் கல்லூரி!



யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு ஷாகிராக் கல்லூரிக்கும் இடையிலான இறுதியாட்டம் (09-10-2023) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தேசிய ரீதியில் பலம் வாய்ந்த கொழும் ஷாகிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 04:03 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அகில இலங்கை 20 வயதுப் பிரிவில் சம்பியனானது.

2022, 2023 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் 20 வயதுப் பிரிவில் காற்பந்தாட்டத்தில் சம்பியனான ஒரே பாடசாலை சென் பற்றிக்ஸ் கல்லூரி என்பது குறிப்பிடத் தக்கது.

இவ் அணி தனது முதலாவது போட்டியில் அனுராதபுரம் நச்சடுவா முஸ்லீம் மகா வித்தியாலயத்தை 07:00 என்ற கோல் கணக்கிலும், இரண்டாவது போட்டியில் கடயமுட்டை முஸ்லீம் மத்திய கல்லூரியை 03:01 என்ற கோல் கணக்கிலும், கால் இறுதியாட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பலம் பொருந்திய மட்டக்களப்பு ஏறாவூர் அலிஹார் தேசிய பாடசாலையை 02:00 என்ற கோல் அடிப்படையிலும், அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 01:00 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று, இறுதிப் போட்டியில் கொழும்பு ஷாகிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு (Penalty) உதைமூலம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் வயதுப் பிரிவினர் 2018 ஆம் ஆண்டில் 16 வயதுப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் காற்பந்தாட்டத்தில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த அணி என்பது குறிப்பித்தக்கது.

# தென்னயிலிருந்து விழுந்து நான்கு பிள்ளைகளின் தந்தை மரணம்!

தென்னையால் விழுந்து, நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த செவ்வாயன்று உயிரிழந்துள்ளார். புத்தூர் கிழக்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 6ஆம் திகதி, தென்னையில் சீவல் தொழில் செய்வதற்காக ஏறிய நிலையில் வழுக்கி கீழே விழுந்ததுள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் இன்றையதினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மருமகனுடன் சைக்கிளின் பின்னால் இருந்து சென்ற பருத்தித்துறையை சேர்ந்த நபர் கீழே விழுந்து உயிரிழப்பு!

வைத்தியசாலைக்கு, மருமகனுடன் சைக்கிளின் பின்னால் இருந்து சென்ற ஆணொருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் வெளிச்சவீடு வீதி, பருத்தித்துறையை சேர்ந்த பிலிப்பு இராஜசிங்கம் (வயது 52) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 7ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக மந்திகை வைத்தியசாலைக்கு, தனது மருமகனின் சைக்கிளின் பின்னால் இருந்து சென்றுள்ளார். இந்நிலையில் இடைவழியில் அவர் கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவர் முச்சக்கர வண்டி மூலம் மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி 10ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் நேற்றையதினம் ஒப்படைக்கப்பட்டது.



# வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவிப்பு

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் (Anne marie Belinda Trevelyan) தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரித்தானிய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் வடமாகாண மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும் பிரித்தானிய அமைச்சர் கூறியிருந்தார். இந்தச் சந்திப்பு 12-10-2023 அன்று யாழ்ப்பாண நகரில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்தார்.



வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக் (Andrew Patrick) அவர்களும் கலந்துகொண்டார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 584 விவசாயிகளுக்கு ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து என்பத்தையாயிரத்து நானூற்றி எழுபத்தி மூன்று ரூபா நஷ்ட ஈடு



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2023, 2024 பெரும்போகத்தில் வறட்சி, வெள்ளம், காட்டுயானை தாக்கத்திற்கு உள்ளான விவசாயிகளுக்கே குறித்த நஷ்டஈடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி கமநல காப்புறுதிச்சபையின் உதவிப்பணிப்பாளர் (பதில்) P. பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்திருந்தார். தொடர்ந்து தெரிவிக்கையில் 2023, 2024 காலப்பகுதியில் 71947 ஏக்கரில் காலபோக நெற்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1215 ஏக்கர் நிலப்பரப்புக்கு 584விவசாயிகளுக்கு வெள்ளம், வறட்சி, காட்டு யானைகளின் தாக்கத்திற்காக 127850473 ரூபா நஷ்ட ஈடாக கிடைக்கப்பெற்றுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை விவசாய அமைச்சர் கிளிநொச்சி வருகின்ற போது சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளுக்கு வழங்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனைத்தொடர்ந்து அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பில் இடப்படும் என தெரிவித்தார். கமநல காப்புறுதி சபையின் இவ்வாறான நன்மைகளை விவசாயிகள் அடைவதற்கு அனைத்து விவசாயிகளும் தங்களின் பயிர்களுக்கு காப்புறுதி செய்வதுடன் தமது கால்நடைகளுக்கான காப்புறுதிகளையும் மேற்கொள்ள முடியும்.

விவசாயிகளுக்கான ஓய்வூதிய காப்புறுதியை பெருமளவு விவசாயிகள் பயன்படுத்துவதில்லை எனவும் இவை விவசாயிகளின் இறுதி நேரத்தில் பிரயோசன படுத்தும் எனவே விவசாய ஓய்வூதிய காப்புறுதியையும் விவசாயிகள் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மன்னார் பள்ளிமுனை கடற்கரை யில் இருந்து கடலட்டை பிடிக்கச் செல்லும் தொழிலாளர்களுக்கு பாரிய இடையூறு

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர் (12-10-2023)

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து அட்டை பிடிக்க கடலுக்குச் செல்லும் பள்ளிமுனை கிராம மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதோடு, கடற்படையினர் இடையூரை ஏற்படுத்துவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் (12) வியாழக்கிழமை காலை பள்ளிமுனை கடற்கரையில் இருந்து கடலட்டை பிடிக்க தொழிலுக்குச் செல்ல முயன்ற போது தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களின் பின்னர் தற்போது கடலட்டை பிடிக்கும் சீசன் என்பதால் மீனவர்கள் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் படகு ஒன்றில் சுமார் 10 பேர் வரை கடலட்டை பிடிக்க சென்று வருகின்றனர்.தற்போது படகு ஒன்றில் 8 சிலீண்டர்களுடன் 3 பேர் மாத்திரமே தொழிலுக்குச் செல்ல முடியும் என மன்னார் கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது எரிபொருள் விலையேற்றம் காரணமாக ஒரு படகில் 7 அல்லது 8 பேர் வரை செல்கின்றோம்.இரண்டு படகில் செல்ல வேண்டியவர்கள் ஒரு படகில் சேர்ந்து தொழிலுக்குச் செல்கின்றோம்.

12-10-2023 அன்று படகு ஒன்றில் 3 பேர் மாத்திரமே செல்ல முடியும் என கடற்படை அறிவித்தமையினால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரம் இன்றி மீன் பிடிக்கச் சென்றால் மீன் மாத்திரமே கொண்டு வர முடியும்.

அட்டை பிடிக்கச் சென்றால் அட்டை மாத்திரமே பிடித்து வர முடியும். இவ்வாறான நடவடிக்கைகளினால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் கடலில் ஒரு தொழிலை மட்டுமே நம்பி செல்ல முடியாது.

எனவே கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் பள்ளிமுனை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.

உரிய தீர்வு இல்லாது விட்டால் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக பள்ளிமுனை மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

# இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மன்னார் பயிற்சி நிலையத்தின் பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல முயற்சி

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி முயற்சியால் தடுத்து நிறுத்தம்




- மன்னார் நிருபர் (12-10-2023)

மடு கல்வி வலயத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மன்னார் தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள பெறுமதி வாய்ந்த தொழிற் பயிற்சி உபகரணங்கள் குறித்த தொழிற்பயிற்சி கூடத்திலிருந்து அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல இருந்த நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் முயற்சியால் 12திகதி வியாழக்கிழமை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மன்னார் தொழிற் பயிற்சி அலுவலகத்திலிருந்து அழகு சாதனம் மற்றும் சிகை அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட தொழிற் பயிற்சி உபகரணங்கள் அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்வதற்கு ஆயத்தமாகிய நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் குறித்த இடத்திற்கு விரைந்து சென்றார்.

மன்னார் மாவட்டத்திற்கான தொழிற்பயிற்சி நிலையத்திற்கு இளையோர்களின் தொழிற்பயிற்சிக்கு என பல லட்சம் பெறுமதியான அழகு சாதனம் மற்றும் சிகை அலங்காரப் பொருட்கள் குறித்த நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றது.

எனினும் அவற்றை இங்குள்ள இளையோர்களின் தொழில் முயற்சிக்கு பயன்படுத்தாமல் அம்பாந்தோட்டைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்று பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வாகனமும் வந்தது.

அப்பகுதி இளைஞர் யுவதிகள் மூலம் சம்பவத்தை கேள்விப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேரடியாக தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சென்று பார்வையிட்டு வடக்கு மாகாண ஆளுநரை தொடர்பு கொண்டு பேசியதன் அடிப்படையில் குறித்த பொருட்களை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல இருந்த முயற்சி கைவிடப்பட்டது.

மேலும் குறித்த தொழிற்பயிற்சியை மன்னார் மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்கு தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.








இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியமை ஒரு மறைமுகமான நாடு கடத்தலாகும்




## ரணிலுக்கு பிள்ளை இருந்தால் தாயின் வலி தெரிந்திருக்கும் - மட்டக்களப்பு மாவட்ட தலைவி தாக்கப்பட்டமையை கண்டிக்கிறோம்

**வடக்கு கிழக்கு வலிந்து காணமலாக்கப்பட்ட சங்கத்தின் தலைவி யோகராசா கனக ரஞ்சனி தெரிவிப்பு**

ரணிலுக்கு பிள்ளை இருந்தால் தாயின் வலி தெரிந்திருக்கும் - மட்டக்களப்பு மாவட்ட தலைவி தாக்கப்பட்டமையை கண்டிக்கிறோம்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியமை ஒரு மறைமுகமான நாடு கடத்தலாகும்.

பிள்ளைகளை தொலைத்து விட்டு நீதி கேட்டுப் போராடிவரும் தாயின் வலி தெரியாத சிறிலங்கா காவல் துறை வலிந்து காணமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி மீது தமது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டமையை வன்மையாக கண்டிப்பதாக வடக்கு கிழக்கு வலிந்து காணமலாக்கப்பட்ட சங்கத்தின் தலைவி யோகராசா கனக ரஞ்சனி தெரிவித்தார்.

திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதி யுத்தத்தில் சரணடைந்த மற்றும் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை தேடி அம்மார் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் மேச்சல் நிலங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராக எமது மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பங்கெடுத்தனர்.

இந்தப் போராட்டம் இடம்பெற்று கொண்டிருந்தபோது நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அவரிடம் தமிழர் நிலப் பகுதிகளால் மறைக்கப்படுவதற்கு நீதி கேட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நீதி கேட்டும் ஜனநாயக வழியில் போராடிய மக்களை காடை சட்டங்களை பயன்படுத்தும் சிறிலங்கா பொலிசார் முரக்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமிடம் ஒன்றை கேட்க விரும்புகிறோம் உங்களுக்கும் பிள்ளை இருந்திருந்தால் ஒரு தாயின் வலி எவ்வாறு இருந்திருக்கும் என்பதை அறிந்திருப்பீர்கள்.

ஏனெனில் ஜனநாயக வழியில் நீதி கேட்டு போராடிய எமது மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி அமலதாஸ் அமலநாயகி பலத்த ஆடி காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த அம்மாவின் உயிருக்கு ஆபத்து வரும் ஆனால் அத்தனை பொறுப்புகளையும் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் ஜனநாயக நீதியில் போராடுபவர்களை காட்டுமிராண்டித்தனமாக அடக்கியமை தொடர்பில் சர்வதேச சமூகம் மௌனம் காக்க கூடாது.

இலங்கையில் தமிழ் மக்கள் மறைமுகமாக காணாமல் ஆக்கப்படுகிறார்கள் கடத்தப்படுகிறார்கள் வெளிநாடு அனுப்பப்படுகிறார்கள் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதை அறிகிறோம்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியமை ஒரு மறைமுகமான நாடு கடத்தலாகும்.

ஆகவே அடக்குமுறைகளுடன் கூடிய இந்த அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்காமல் சர்வதேச நீதியில் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திலுள்ள பழுதடைந்த பயணிகள் மேம்பாலத்திற்கு பதிலாக புதிய பாலம்



- அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்
- 10 நாட்களுக்குள் தற்காலிக பிரவேச வீதி அமைக்க அறிவுறுத்தல்

கொழும்பு, பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திலிருக்கும் பழுதடைந்த பயணிகள் மேம்பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணியை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதுகுறித்து அறிவித்துள்ளார்.

அதுவரை ரயில் நிலையத்திற்கு பயணிகள் செல்வதற்கு வசதியாக பத்து நாட்களுக்குள் தற்காலிக பிரவேச வீதியொன்றை அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போதுள்ள மேம்பாலத்தை இடித்துவிட்டு, புதிய பாலம் கட்டும் பணியை ஐந்து மாதங்களுக்குள் பூர்த்தி செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவையாக கருதி அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு இது தொடர்பான பணியைக் கையளிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளதோடு அதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

இதன் வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இந்த பணிகள் அனைத்தையும் இன்று முதல் ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

# முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன் மாலதியின் 36 ஆவது நினைவு தின நிகழ்வு








முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன் மாலதியின் 36 ஆவது நினைவு தின நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு தர்மபுரம் பகுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன், சாஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகான கல்வி அமச்சர் குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் பாதுகாப்புடன் காணி பிடிக்க சென்ற அரச ஊடகவியலாளர் – பிரதேச மக்களால் விரட்டியடிப்பு



பொலிஸ் பாதுகாப்புடன் அரச காணி பிடிக்க சென்ற ஊடகவியலாளர் பிரதேச மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சியில் அரச ஊடகத்தில் பணியாற்றும் குறித்த செய்தியாளர் மற்றுமொரு செய்தியாளருடன் அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அருகில் கனரக இயந்திரம் கொண்டு துப்பரவாக்க முற்பட்டுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பிரதேச மக்கள் அவ்விடத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டனர். இந்த நிலையில் குறித்த செய்தியாளர் புலனாய்வு துறையின் துணையுடன் பொலிசாரின் பாதுகாப்பை கோரியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரை பயன்படுத்தி குறித்த பகுதியில் அவருடைய செய்திகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் மூவர் காணிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் அரச செல்வாக்குக்கு அஞ்சி குறித்த ஊடகவியலாளர் உட்பட மூவருக்கு அப்பகுதியில் அரச அதிகாரிகளால் காணி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காணியானது, மக்கள் குடியிருப்பாக இருந்த நிலையில், அம்மக்களிற்கு மாற்று இடங்கள் வழங்கப்பட்ட பின்னர் தொழில் சார் விடயங்களிற்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில் அரச புலனாய்வாளர்களின் செல்வாக்குடன், பொலிசாரைக் கொண்டு மக்களை அச்சுறுத்தி காணி பிடிக்க முற்பட்ட நிலையில் பிரதேச மக்கள் ஒன்று திரண்டு தடுத்து நிறுத்தினர்.

குறித்த ஊடகவியலாளர்களிற்கு கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிரந்தர காணி மற்றும் வீடு உள்ள நிலையில் அரச காணியை அரச செல்வாக்குடன் கையகப்படுத்த நினைப்பது மக்கள் மத்தியில் விசமத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை குறித்த காணியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் உட்பட 65க்கு மேற்பட்ட குடும்பங்கள் காணி இன்றி உறவினர் வீடுகளில் தங்கி உள்ள நிலையில், குறித்த செய்தியாளர்களிற்கு காணி வழங்கப்படுவது தொடர்பில் மக்கள் விசனம் முன்வைத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மக்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

# தமிழ் தேசிய கட்சிகளின் கதவடைப்பு போராட்டத்திற்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஆதரவு

**- நடராசா லோகதயாளன்**

இம்மாதம் 13ஆம் திகதி, (அதாவது இன்று வெள்ளிக்கிழமை) தமிழ் தேசிய கட்சிகள் திட்டமிட்டுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ் வணிகர் கழகம் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரும் விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த கதவடைப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும், தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயங்கள் பேசப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்க தலைவர் தசித்தார்த்தன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் உரிமை போராட்டம் சார்ந்த எந்த நடவடிக்கைக்கும் பரிபூரண ஆதரவை வழங்கி வரும் பாரம்பரியத்தையுடைய யாழ்ப்பாண வணிகர் கழகம், இந்த போராட்டத்தையும் முழுமையாக ஆதரிப்பதாக வணிகர் கழகத்தினர் தெரிவித்தனர்.

எனினும் நீதிபதி விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு, முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த சுதவடைப்பு போராட்டம் நடந்தப்பட வேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.


போராட்ட அறிவிப்பில் இந்த கோரிக்கையும் இணைக்கப்பட வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் அவர்களது கோரிக்கைக்கு அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.

இதேவேளை, நீதிபதி சரவணராஜாவை கொச்சைப்படுத்தும் விதமாக அரசியல் கட்சிகள் கருத்து தெரிவிப்பதை கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் வணிகர் கழகத்தினர் வலியுறுத்தினர்.

இதனிடையே பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அண்மையில், ரி.சரவணராஜாவின் ஆங்கில புலமை தொடர்பில் தெரிவித்த கருத்துக்கு வணிகர் கழகத்தினர் கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு மேலும் ஒரு சீன ஆய்வுக் கப்பல் வருகை

**- நடராசா லோகதயாளன்**



The Open Day event offers a unique opportunity to showcase the cutting-edge research and scientific endeavors that are being conducted on our research vessel. We sincerely hope that you can join us for this enlightening and informative day on board the R/V SHIYAN 6. Your presence would be an honor, and we look forward to the possibility of welcoming you and your team.

To confirm your attendance and for any additional information you may require, please contact Dr. by **12th October 2023, Thursday.**

Thank you for considering our invitation, and we eagerly anticipate your positive response.

Sincerely,

Prof. Chaolun Li
Director-general
South China Sea Institute of Oceanology, Chinese Academy of Sciences
164 West Xingang Road, Guangzhou, China

சீனாவின் சியா யான் 06 என்ற ஆய்வுக் கப்பல் இலங்கை வருவது இப்போது உறுதியாகியுள்ளது.

அந்தக் கப்பல் வருமா வராதா என்ற சர்ச்சையின் மத்தியில் நிகழ்விற்கான அழைப்பிதழை சீனத் தூதரகம் விநியோகித்து வருகின்றது.

சினாவின் சியா யான் 06 கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வருவதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கூறினாலும் திட்டமிட்ட திகதியில் கப்பலை கொண்டு வருவதில் சீனா உறுதியாகவே இருந்து வருகின்றது என்பது இந்த அழைப்பிதழ் விநியோகத்தின் மூலம் தெரிகின்றது.

சீனாவில் இருந்து கப்பல் புறப்பட்டு இந்தியாவின் கிழக்கு திசையில் ஒரு மாதம் ஆய்வு செய்து. அதனை நிறைவு செய்து தற்போது உணவு, தண்ணீருக்காகவும் இலங்கையுடனான ஆய்வுப் பணிக்காகவும் இலங்கை நோக்கி பயணிக்கிறது.

இலங்கையில் தற்போது எழுந்துள்ள சர்ச்சைக்குரிய ஆய்வின் பின் மீண்டும் இந்தியாவின் மத்திய பகுதிக்கு அப்பாலுள்ள சர்வதேசக் கடற்பரபிலும் சீனாவின் இந்த ஆய்வுக் கப்பல் ஆய்வில் ஈடுபடவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் கடலில் நீர் நிலை ஆய்வு மற்றும் கடலின் அடியிலான ஆய்வுகளில் இக்கப்பல் ஈடுபடவுள்ளது. நீர்நிலை ஆய்வு என்பது எங்குமே சர்ச்சைகள் கொண்ட ஆய்வாகவே காணப்படும். அதிலும் அடிப்படுகை ஆய்வு என்பதே ஒரு பரரிய விளைவுகளையும் ஏற்படுத்தும் விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் ஒக்டோபர் 25ஆம் திகதி வருவதற்காக அனுமதி கோரப்பட்டபோதும் நவம்பர் 25ஆம் திகதி வருமாறு இலங்கை கோரிக்கை விடுத்திருந்தது. இவற்றின் மத்தியிலும் ஒக்டோபர் 25ஆம் திகதி வரும் கப்பலில் இலங்கை ஆய்வாளர்கள் அல்லது விஞ்ஞானிகள் நால்வரை ஏற்றி 10 நாள் ஆய்வில் ஈடுபட்ட பின்பு மீண்டும் துறைமுகம் வந்து ஏற்றிய இலங்கையரை இறக்கிய பின்பு கப்பல் இலங்கையில் இருந்து தனது பயணத்தை மற்ற திசையை நோக்கி ஆரம்பிக்கும். இலங்கை விஞ்ஞானகளை இறக்கிய பின்பு நாட்டில் இருந்து செல்லும்போதும் அந்தக் கப்பல் ஆய்வில் ஈடுபட்டவாறே செல்லும் என்று அறிய முடிகிறது.

இவ்வாறு இடம்பெறவுள்ள ஆய்வின் ஆரம்பப் பணியில் கலந்துகொள்ளுமாறு சீனாவின் தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனம், சீன அறவியல் அகடமி கடித தலைப்பில் இந்த அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே இதனை இந்தியா சந்தேக கண்கொண்டு பார்க்கின்றது. இதனால் கப்பல் தொடர்பான விடயம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது.


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய அமைச்சர் டக்ளஸ் உள்ளடக்கிய ஐவர் கொண்ட குழு

இலங்கையின் தேர்தல் முறை தொடர்பில் ஆராய்வதற்கும் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரை வழங்குவதற்காக ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நிமல் சிறிபாலடி, ஜீவன் தொண்டமான் மற்றும் பிரசன்னரணதுங்க குறித்த குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

குறித்த விடயம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி சமர்ப்பித்த பரிந்துரை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக இருக்க வேண்டும், அவர்களில் 160 பேர் அந்தந்த தொகுதிகளில் இருந்து நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

எஞ்சிய 65 பாராளுமன்ற உறுப்பினர்களை தேசிய அல்லது மாகாண மட்டத்தில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அரசியலமைப்பை திருத்துவதற்கும் அதற்குரிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கும் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளேன்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது சிறிய கட்சிகளுக்கு மிகவும் பொருத்தமானது என்பது எனது நிலைப்பாடாக இருந்தாலும், ஒருமித்த கருத்துக்கு வருவதற்கு, 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் இருந்து நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

எவ்வாறாயினும், தற்போதைய 160 வாக்காளர்களில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து மோதலின் போதும் அதற்குப் பின்னரும் பாரிய அளவிலான இடப்பெயர்வு மற்றும் இடம்பெயர்வு காரணமாக நிறைய எண்ணிக்கை வேறுபாடுகள் உள்ளன.

எனவே, முறையான எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளவும், தற்போதுள்ள 160 தொகுதிகளின் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளவும் நான் முன்மொழிந்தேன்

முன்மொழிவுப் பிரதிநிதி முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 65 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, தேசிய பிரதிநிதி15 எண்களைத் தக்கவைத்து, மீதமுள்ள 50 எண்களை மாகாண பிரதிநிதிக்கு ஒதுக்கவும்.

மேலும், இரண்டு வாக்குச் சீட்டுகளை அறிமுகப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன் ஒன்று தொகுதியில் வாக்காளர் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிப்பது மற்றும் இரண்டாவது பிரதிநிதி க்காக வாக்காளருக்கு விருப்பமான கட்சிக்கு வாக்களிக்க உதவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை தேசிய மின்சார அமைப்பிற்கு தினசரி 6.5% புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இலங்கை தேசிய மின்சார அமைப்பிற்கு தினமும் 6.5% புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் சூரிய சக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என கூறப்படுகின்றது.

தனியார் சூரியப்படல நிறுவனம் ஒன்றின் தலைவர் திரு. ஜயந்த சமரகோன் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் பூநகரி ஏரியை அண்மித்த பகுதிகளில் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. 1000 ஏக்கரில் 700 மெகாவோல்ட் சூரிய சக்தி மின் அமைப்பு நிறுவப்படும்.

மேலும் சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பூநகரி ஏரியை முழுமையாக அபிவிருத்தி செய்து அப்பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் 5 பில்லியன் ரூபாவினை செலவழிக்க உள்ளது.




இத்திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சார அமைப்பில் சேர்க்கப்படுவதால் அப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள்.





இது தொடர்பான திட்ட மீளாய்வு கூட்டம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் 09.10.2023 அன்று இடம்பெற்றது. கலந்துரையாடலில் நீர்ப்பாசன திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், மின்சார சபை, விவசாய திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகளும் மற்றும் பல அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் பயங்கரவாத மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்




(09-10-2023)

மட்டக்களப்பில் இலங்கை அரசு உடனடியாக அடக்குமுறை சட்டவரைகளான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் மீளப் பெற வேண்டும் என கோரி எதிர்ப்பு தெரிவித்து கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையில் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் திங்கட்கிழமை (9) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் காலை 10 மணியளவில் மட்டு கல்லடி பாலத்திற்கு அருகாமையில் ஒன்றிணைந்தனர்.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நிதி வேண்டும், அனைத்து மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறலை உறுதி படுத்து, நிகழ்நிலை காப்பு சட்டத்தை முன்மொழிவதை மீளப்பெறல், ஊடகத்திற்கு சுதந்திரம் மற்றும் சுயாதீனம் வேண்டும், தகவல்களை அறிவதற்கும் கருத்து சுதந்திரத்திரம் எங்கள் அடிப்படை உரிமையாகும்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவை மீளப்பெறல், சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவது எங்களது சுதந்திரத்தை உங்களால் மட்டுப்படுத்த முடியாது, போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வீதி ஊடாக அரசடி சந்தியை அடைந்து அங்கிருந்து பொலிஸ் தலைமையக நிலைய வீதி சுற்று வட்டத்தை அடைந்து காந்தி பூங்காவை சென்றடைந்து.




பின்னர் அங்கு கோஷங்களை எழுப்பியவாறு பகல் 12 மணி வரையில் சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கிழக்கு மாகாண சிவில் சமூகத்துடைய வேண்டுகோள் இந்த பயங்கரவாத மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டங்களை இல்லாமல் செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் "நெஞ்சறை" சத்திர சிகிச்சை முன்னெடுப்பு — 3 மணி நேர முயற்சியில் இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டது



## பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எம். மதுரகீதன் தலைமையிலான வைத்திய நிபுணர்கள் குழு இணைந்து முன்னெடுப்பு

- மன்னார் நிருபர் (11-10-2023)

"நெஞ்சறை" சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதி கொண்ட பெரிய வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் "நெஞ்சறை" சத்திர சிகிச்சை, அந்த வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டு இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

நெஞ்சிலே ஏற்பட்ட பாரிய கத்தி குத்தினால் நெஞ்சுக் குழியினுள் ஏற்பட்ட தொடர் குருதிப்பெருக்கை நிறுத்த நெஞ்சுக்கூட்டை திறந்து சத்திரசிகிச்சை (Emergency Thoracotomy) மேற்கொண்டு மன்னார் பொது வைத்தியசாலையில் இளைஞர் ஒருவரின் உயிர் இவ்வாறு காப்பாற்றப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி வியாழன் இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 35 வயது இளைஞர் ஒருவர் வலது பக்க நெஞ்சு பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் உடனடியாக அவர் சத்திர சிகிச்சை கூடத்துக்கு எடுக்கப்பட்டு வலது பக்க நெஞ்சறையினுள் IC tube எனப்படும் குழாய் செலுத்தப்பட்டு அவருடைய நெஞ்சுக் குழியினுள் வேகமான தொடர் குருதிப்பெருக்கு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவசரமாக செய்ய வேண்டிய CT scan வசதி மற்றும் நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதி என்பன மன்னார் வைத்தியசாலையில் இல்லாத காரணத்தினால் அந்த நோயாளியை யாழ்ப்பாணம் அனுப்புவதாக முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் அவரை வெலிசறை நெஞ்சு வைத்தியசாலைக்கு அனுப்புமாறு யாழ்ப்பாண வைத்தியசாலையில் இருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்ட நிலையில் நோயாளி ஏறக்குறைய 3 லீட்டர் குருதியை இழந்து விட்ட நிலையில் குருதிப்பெருக்கு மிகவும் வேகமாக இருந்த காரணத்தினால் அவரை நோயாளர் காவு வண்டியில் பிறிதொரு வைத்தியசாலைக்கு அனுப்புவது அவரது உயிருக்கு மிகவும் ஆபத்தானது என முடிவு செய்யப்பட்டு மன்னார் வைத்தியசாலையிலேயே நெஞ்சறை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எம். மதுரகீதன் தலைமையிலான சத்திர சிகிச்சை அணியும் உணர்விழப்பியல் மற்றும் அதி தீவிர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான உணர்விழப்பு அணியும் இணைந்து நெஞ்சுக்கூட்டை திறந்து உள்ளே தேடி குருதி பெருக்கை கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய நிபுணர்களினால் சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட முடிவினாலும், ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவின் திறமை வாய்ந்த அவசர நிலை பராமரிப்பினாலும், ஒரு இளைஞனுடைய பெறுமதிமிக்க உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சையின் போது மன்னார் வைத்தியசாலை குருதி வங்கியின் பங்கு மிகவும் அளப்பரியதாகும்.

மிகப் பெரிய அளவிலான குருதி மாற்றீடு செய்யப்பட்டே இந்த இளைஞனின் உயிர் காப்பாற்றப் பட்டிருக்கிறது. CT scan மற்றும் நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணத்துவ வசதி கொண்ட பெரிய வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் இந்த சத்திர சிகிச்சை அந்த வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது மிகவும் சிறப்பான விடயமாக கருதப்படுகிறது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இந்திய வெளிவிவகார அமைச்சர் — ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையில் சந்திப்பு

## இரு நாட்டு ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் வகையில் 03 ஒப்பந்தங்கள் கைசாத்து

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் (IORA) கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு 12-10-2023 பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்திய - இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளும் வகையிலான 03 ஒப்பந்தங்களும் கைசாத்திடப்பட்டன.

அதேபோல் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையத்தின் ஊடாக திறந்துவைக்கும் நிகழ்வும் இதன்போது, இடம்பெற்றது.

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாயாக அதிகரித்துக்கொள்வதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளதோடு அதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

அதன் கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்தி பணிகள், பொலன்னறுவையில் பல்லின - மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழான 2889 நிர்மாணிப்புக்கள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5000 மெட்ரிக் டொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

அதேபோல் இலங்கையின் தேசிய பாலுற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான (அமுல் குழுமம்)



மற்றும் இலங்கையின் காகீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் பலனாக கைசாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகள்



கிடைக்கவுள்ளன. அத்தோடு, முதல் ஐந்து வருடங்களில் பால் உற்பத்தியை 53% வீதத்தினால் அதிகரித்துக்கொள்ளவும் 15 வருடங்களில் இலங்கையை பாலுற்பத்தியில் தன்னிறைவான நாடாக மாற்றும் நோக்கத்துடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் கீழ் கால்நடைகளுக்கு அவசியமான உயர்தர மருந்துகள் மற்றும் உணவு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி 2 இலட்சம் பாலுற்பத்தியாளர்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கால்நடை வளர்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்குதல், பால் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுடங்களுக்கான முதலீடுகள் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரதிபலன்கள் கிட்டும்.

இதன்போது இலங்கை - இந்திய உறவுகளுக்கு 75 வருடம் பூர்த்தியாவதையிட்டு விசேட நினைவுச் சின்னமொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் புனீத் அகர்வால் ஜே.பீ.சிங், இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரசூ புரி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் தேனுக விதான கமகே, பாராளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு
11.10.2023

# சிறுமி வைஷாலியின் கை அகற்றிய விவகாரம் — மூவரை கைது செய்யுமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி வைசாலியின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் மூன்று பேரை உடனடியாக கைது செய்யுமாறு சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கோரிக்கையை முன்வைத்தனர்.

துண்டிக்கப்பட்ட கை தொடர்பில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கை மன்றுக்கு சமர்பிக்கப்படாத நிலையில்,

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய விடுதி வைத்தியர், பெண் தாதி உத்தியோகத்தர், ஆண் தாதி உத்தியோகத்தர் ஆகிய மூவரை உடனடியாக கைது செய்து வழக்கை முன்னோக்கி கொண்டு செல்ல மன்று அனுமதிக்க வேண்டும் என சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் அடுத்த வழக்கில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்த நீதிபதி ஏ ஏ.ஆனந்தராஜா வழக்கை நவம்பர் மாதம் ஏழாம் திகதிக்கு தவணையிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமி வைசாலியின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது.



இது தொடர்பில் யாழ் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில் நீதிமன்றம் சிறுமி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மூன்று வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தது.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது துண்டிக்கப்பட்ட கை தொடர்பில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கை மன்றுக்கு சமர்பிக்கப்படவில்லை. இந்நிலையிலே சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தனர்.

# கோலாகலமாக இடம்பெற்ற யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா!



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக 2023ம் ஆண்டுக்கான பண்பாட்டு பெருவிழா மிக மிக சிறப்பாக இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தலைமையில் பெற்ற இந்நிகழ்வில், முதல் நிகழ்வாக ஊர்திகள் முன்னே பவனிவர காவடி, நடனம், உட்பட்ட கலைஞர்கள் அணிவகுத்துவர பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வடமாராட்சி கிழக்கு கலாச்சார மண்டபத்தில் அமைந்திருந்த முத்தையா அவரங்குவரை அழைத்துவரப்பட்டனர்.

அங்கு மங்கல சுடர்களினை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாவட்ட செயலாளர் சிவபாதசுந்தரம், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளர், கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்ட ஆயுள்வேத வைத்தியர் ஜோகநாதன் யாழ் மாவட்ட செயலக கலாச்சார சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர், பிரதேச சமூக சேவையாளரும் கலைஞருமான சோதிலிங்கம், மருதங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், காத்தவராயன் கூத்து அணணாவியார் இராமநாதன் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, உட்பட பலரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழ் மொழி வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை தலைமை உரை என்பன இடம் பெற்றதுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச பிரதேச கலைஞர்களின் நடனம் நாடகம் கிராமிய பாடல்கள் கவிதை பாட்டு போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன.



இந்நிகழ்வுகளில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட பல்வேறு கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், என் பலரும் கலந்துகொண்டனர்.

இன்றைய அரங்கு மறைந்த கலைஞர் அண்ணாவியார் முத்தையா அவர்களுடைய ஞாபகமாக இடம் பெறறதுடன் அரங்க செயற்பாட்டு உரையினை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக முன்னாள் கலாசார உத்தியோகத்தரும், தற்போதைய பருத்தித்துறை பிரதேச செயலக கலாசா உத்தியோகத்தருமான திரு. கார்த்திகேயன் நிகழ்த்தியிருந்தார்.



# இந்திய மீனவர்களின் படகின் மூலமாக, சட்டவிரோதமாக இலங்கை திரும்பிய மூவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணத்தில் இருந்து யுத்த காலப்பகுதியில் இந்தியாவுக்கு சென்ற நிலையில் அங்கு வாழ முடியாத சூழலில் தாயகம் திரும்பிய மூவர் பருத்திதுறை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது 1990 ஆம் ஆண்டு குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாயாரும் அவரது ஆண் பிள்ளையும், பெண்பிள்ளையும் தமிழகத்திற்கு சென்று சென்னையில் 30 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் உதவியுடன் படகு மூலம், யாழ் வடமராட்சி குடத்தனை பகுதியில் வந்திறங்கி உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிசாரால் 10-10-2023 அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மீண்டும் ஒரு கடையடைப்பு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



காந்தி சொல்வார்…. அகிம்சை என்பது சாகத் துணிந்தவரின் ஆயுதம், அது சாகப் பயந்தவரின் ஆயுதம் அல்லவென்று. காந்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் பொழுது சாகத் தயாராக இருந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார். எனவே சாகத் தயாராக இருப்பது முதலில் தலைவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் நிரூபித்தார். தனக்கு கீழே இருந்தவர்களை அவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்குமாறு கேட்பதில்லை. முதலில் அவரே அந்தப் போராட்டத்தில் இறங்குவார். அதுதான் காந்தியின் பலம். அதனால்தான் அவர் "எனது வாழ்க்கையே எனது செய்தி" என்று கூறக்கூடியதாக இருந்தது.

ஆனால் தமிழரசியல் அரங்கில் முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால், ரிஸ்க் எடுப்பதற்கு தயாரில்லாத தலைவர்கள் பொதுமக்களை ரிஸ்க் எடுக்குமாறு தூண்டுகிறார்களா? என்று கேட்கத் தோணுகிறது.

ஏழு கட்சிகள் இணைந்து ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. முஸ்லிம் கொங்கிரசும் அதற்கு ஆதரவாக வாக்குறுதி அளித்ததாக ஒரு தகவல். முதலில் இந்த வாரம் கடையடைப்பு என்று கூறப்பட்டது. ஆனால் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக திகதியை ஒத்திவைக்குமாறு கேட்கப்பட்டது. அதனால் வரும் இருபதாம் திகதி, வெள்ளிக்கிழமை பூரண கடையடைப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏன் வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம், அது வார இறுதி என்பதால் அன்றைக்கு வியாபாரம் பெரியளவு நடக்காது. எனவே வணிகர்கள் கடைகளை மூடச் சம்மதிப்பார்கள். இரண்டாவது காரணம், அன்றைக்கு ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குத் தனியார் வகுப்புகள் நடக்காது. எனவே அந்தக் கடையடைப்பால் பிள்ளைகளின் படிப்பு அதிகம் பாதிக்கப்படாது. மூன்றாவது காரணம், வெள்ளிக்கிழமை என்பதனால் முஸ்லிம்களும் அந்நாளில் கடைகளை மூடத் தயார் என்பது. இம்மூன்று காரணங்களினால் அந்த வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதைவிட முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், தமிழ் அரசியல்வாதிகளிடம் 2009 க்குப் பின்னரான அறவழிப் போராட்டம் தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இல்லை என்பது. அவர்கள் போராடுவோம் போராடுவோம் என்று கூறுகிறார்கள், ஆனால் எப்படிப் போராடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. புதிய போராட்ட வடிவங்களைக் கண்டுபிடிக்க அவர்களால் முடியவில்லை. அதனால்தான் பழைய, வழக்கொழிந்த, அல்லது சிறு திரள் கவனஈர்ப்புப் போராட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பெருந்திரள் மக்கள் போராட்டங்களை ஒழுங்குபடுத்த அவர்களால் முடியவில்லை.

இரண்டாவது காரணம், அவர்கள் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், அவர்கள் தங்களுடைய மக்களுக்குத்தங்களுடைய அரசியல் இலக்குகளுக்கு விசுவாசமாக இல்லை. அதற்காக அர்ப்பணிப்போடு போராடத் தயாரில்லை. சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கட்டி, தாயகம் தேசியம் சுயநிர்ணயம்…. என்று கோஷம் வைத்தால் தமிழ் மக்கள் தங்களின் பின் வருவார்கள் என்று கற்பனை செய்கிறார்கள். அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர்களை முன்னிறுத்தி அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சின்னங்களை முன்னிறுத்தி வாக்குகளைத் திரட்ட ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஒரு புதிய சின்னத்தை ஒரு புதிய கொடியை அறிமுகப்படுத்தி அதற்காக அர்ப்பணித்து தம்மை உருக்கிப் போராடி அந்தச் சின்னத்தை அந்த புதிய பெயரை மக்களுடைய மனங்களில் ஆழமாகப் பதிய வைக்க அவர்களால் முடியவில்லை. இந்த இயலாமைகள்தான் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களை தேர்ந்தெடுக்க காரணம். தாங்கள் ரிஸ்க் எடுத்துத்தாங்கள் முன்நின்று போராடத் தயாரில்லாத அரசியல் தலைவர்கள் மக்களுக்கும் நோகாமல் தங்களுக்கும் நோகாமல் எப்படி போராடுவது என்று சிந்தித்து கண்டுபிடித்த ஒரு போராட்டந்தான் கடையடைப்பா?

கடந்த வாரம் அவர்கள் ஒழுங்குபடுத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியைத் தராத ஒரு பின்னணியில், மேற்படி கட்சிகள் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. சங்கிலிப் போராட்டம் ஏன் வெற்றி பெறவில்லை என்பதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாத கட்சிகள் மீண்டும் ஒரு தடவை தங்களுக்கு நோகாத ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனவா? ஏற்கனவே, இந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு ஒரு கடையடைப்பு நடத்தப்பட்டது. இப்பொழுது மேலுமொரு கடையடைப்பு.

எந்த ஒரு போராட்டமும், அது ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி, அது பிரதானமாக இரண்டு விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.

முதலாவது விளைவு, அகவயமானது. அது மக்களை போராட்டத்தை நோக்கித் திரட்ட வேண்டும். குறிப்பிட்ட அமைப்பின் கீழ் அல்லது கட்சியின் கீழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக, ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். அந்த மக்கள் திரட்சிதான் எதிரியைப் பணிய வைக்கும் வெளி உலகத்தைப் போராட்டத்தை நோக்கி ஈர்க்கும். எனவே எந்த ஒரு போராட்டமும் மக்களை ஒரு மையத்தில் திரட்டி மகத்தான ஆக்க சக்தியாக மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது விளைவு புறவயமானது. அப்போராட்டமானது எதிர்த்தரப்புக்கு வலியை ஏற்படுத்த வேண்டும். சேதத்தைத் தாக்கத்தைத் இழப்பை ஏற்படுத்த வேண்டும். எதிர்த் தரப்பின் பொருளாதாரத்தை அல்லது நிர்வாகத்தை முடக்க வேண்டும். எந்த ஒரு போராட்டமும் எதிர்த் தரப்புக்கு தாக்கமான சேதத்தை ஏற்படுத்தவில்லையென்றால் அங்கே அரசியல் வலுச் சமநிலை மாறாது. அரசியல் வலுச்சமநிலையை மாற்றக்கூடிய சக்தி போராட்டத்திற்கு இருக்க வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் கடையடைப்பு என்ற போராட்ட வடிவத்தைப் பார்ப்போம்.

இக்கட்டுரை கடையடைப்பை நிராகரிக்கவில்லை. கடையடைப்பில் ஒரு அடிப்படை நன்மை உண்டு. என்னவெனில், மக்கள் தாமாக முன்வந்து கடைகளை மூடும்பொழுது அங்கே ஒரு கூட்டுணர்வு ஏற்படும். ஒரு நாள் உழைப்பை இழப்பதற்கு தயாராகும் மக்கள் தங்களால் இயன்ற தியாகத்தை அன்றைக்குச் செய்கிறார்கள். அதனால் வரும் இழப்பை ஏற்றுக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறார்கள். எனவே போராட்ட நெருப்பை ஒரு சிறு அளவுக்கேனும் அணையாமல் வைத்திருக்க அந்த நாள் உதவும். மக்களை குறைந்தபட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அது உதவும். அதாவது கடையடைப்பால், அகவயமான நன்மையுண்டு.

இந்த ஒரு நன்மைதான் கடையடைப்பில் உண்டு. மற்றும்படி ஒருநாள் கடையடைப்பு தமிழ் வணிகர்களுக்கும் அன்றாடம் உழைப்பவர்களுக்கும் ஏற்படுத்தக் கூடிய இழப்பை விடவும் அதிகரித்த இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துமா? அல்லது அது உலகத்தை திரும்பிப் பார்க்க வைக்குமா?

கடந்த ஆண்டு டெல்லியில் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். கோட்டா கோகம போலவே விவசாயிகளின் போராட்டமும் உலகின் கவனத்தை ஈர்த்தது. முடிவில் இந்திய அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பணிந்தது.

ஆனால் ஏழு கட்சிகளின் ஒரு நாள் கடையடைப்பு அரசாங்கத்தைப் பணிய வைக்குமா? அல்லது தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரு விடயத்தை உலகத்துக்கும் அரசாங்கத்துக்கும் உணர்த்துவது மட்டும்தான் கடை அடைப்பின் நோக்கமா? அல்லது தமிழ்க் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு நோகாமல் போராடுவதற்கு கண்டுபிடித்த ஒரு போராட்ட முறைதான் கடையடைப்பா?

---

## வீணாவின் கவிக்கணை

வெறித்தோடிய நிலம்போல்
சில நேரம் நம் உள்ளமும்
வறண்டு இருக்கக்கூடும்,
அதை விளைநிலமாக மாற்றும்
வித்தை நம்மிடமே உள்ளபோது,
அடுத்தவர் காலடியில் விழுந்து
மன்றாடுவதும் ஏனோ?
நம்மிடம் தொலைந்த ஒன்றை
மற்றவரிடம் தேடுவதும்
ஞாயமோ?

---

## மனிதநேயப் பணி
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

மனிதநேயப் பணியே மருத்துவம் ஆகிடும்
கனிவொடும் கண்ணிய உணர்வொடும் செய்வது
பிணியொடு வருவோர்க்குப் பணிவொடு
சேவையாற்றும்
மணியான தொழிலே மருத்துவத் தொழில்
காலம் பாராக் கடமை ஆற்றியே!
காலன் கவராக் காக்கும் தொண்டாம்
ஆறா வலியொடு அரற்றும் மனிதர்க்கு
ஆறுதல் சொல்லியே அணைக்கும் சேவை
இயற்கை உபாதைக்கு எழும்ப இயலார்க்கு
இயன்றவரை ஏவல் செய்திடும் தாதியர்
தானாய் உணவைச் சாப்பிட முடியார்க்கு
போனகம் ஊட்டும் பொறுமைப் பணியாளர்
ஆய்வு கூடத்தில் அரும்பணி ஆற்றுவோர்
ஓய்விலா உழைக்கும் உத்தமப் பணியாள்
காவல் கடமையைக் கவனமாய்ப் புரிவோர்
ஏவும் வேலையை ஏற்றிடும் ஊழியர்
தொழில்நுட்ப வேலையைத் தொய்விலாச் செய்வோர்
அழுக்கினை நீக்கிட அயரா உழைப்போர்
மக்கள் சேவையே மகேசன் சேவையாய்
விகாசமாய் விரும்பிச் செய்யும் தொண்டர்கள்.
அவசர தேவையில் அம்புலன்ஸ் ஓட்டுவோர்
அவனியில் ஆண்டவன் அடுத்தநிலை உள்ளோர்
மகத்தான சேவையாம் மருத்துவச் சேவையை
யுகத்தில் உள்ளோர்க்கு யோகிபோல் தந்துமே!
மருத்துவச் செயலில் மகிழ்வொடு உழைப்போரை
விருப்போடு நாமும் வாழ்த்தி நிற்போமே!

போனகம் – – – – – – – – – – – – – உணவு
விகாசம் – – – – – – – – – முகமலர்ச்சி

**ஆக்கம் … கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொழும்பை மையமாக, முழுநாட்டை பரப்பாக, கொண்டு தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம் உதயமாகிறது

## மனோ கணேசன் எம்பி

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දෙමළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka





தமிழ் சமுதாயத்தில், எஞ்சியுள்ள இன்றைய மிகப்பெரிய பலம் கல்வி ஆகும் என்பதை எமக்கு என்றுமில்லாதவாறு உணர்த்தும் காலம் இதுவாகும். ஆகவே, தமிழர் கல்வி துறையை போற்றி பாதுகாத்து, பலவீனமான புள்ளிகளை அடையாளம் கண்டு, கூட்டிணைந்து நாம் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்நோக்கில், தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல் மூன்றாம் நிலை கல்வி வரையிலான ஒட்டுமொத்த தமிழர் கல்வி கட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுக்க இன்று நாம் அங்குரார்ப்பணம் செய்துள்ள தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம், கல்வியிலாளர் முன்னாள் அதிபர் நண்பர் ப. பரமேஸ்வரன் தலைமையில் முழு வீச்சுடன் செயற்படும் என நாம் திடமாக நம்புகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தமிழர் கல்வி மேம்பாட்டு கழக அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள, தமிழர் கல்வி மேம்பாட்டு கழகத்தின் போசகராக மனோ கணேசனும், தலைவராக ப. பரமேஸ்வரனும், செயலாளராக திருமதி. கே. நிரஞ்சன் செயலாளராகவும், நிதி செயலாளராக எம். ஜெயப்பிரகாஷம் நியமிக்கப்பட்டார்கள். ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன. பேராசிரியர் டி. தனராஜ், தொழிட்நுட்ப அமைச்சு பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் மற்றும் கல்வியமைச்சின் முன்னாள் செயற்திட்ட அதிகாரி க. பத்மநாதன், தொழிட்நுட்ப கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. குருமூர்த்தி ஆகியோர் உட்பட பெருந்தொகையானோர் அழைப்பின் பேரில் கலந்துக்கொண்ட இந்நிகழ்வில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

தேசிய, மாகாணசபை மற்றும் தனியார் கல்வி கட்டமைப்பில் தமிழர் கல்விக்கான சமத்துவ வாய்ப்புகள் இன்மை, ஆளணி, பௌதிக வளம், அதிபர் தராதரங்கள், விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழிட்நுட்பவியல் ஆகிய (STEM) பாடங்களுக்கான தமிழ் மொழி ஆசிரியர்களின் கடும் பற்றாக்குறை, தமிழ் மாணவர்களின் இடை விலகல், தொழிட்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்புகளில் தமிழ் மாணவர்களின் ஆர்வமின்மை, மூன்றாம் நிலை கல்வி, மேற்கல்வி, இடைநிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றுக்கான பாடசாலை மட்டத்திலான கல்வி வழிகாட்டல் (Career Guidance), தமிழ் மொழியிலான முன்பள்ளி கல்வி, பொது கல்வித்துறை தரவுகளை சேகரித்தல், முறைப்பாடுகளை ஒருமுகப்படுத்தி தீர்வு தேடல் ஆகிய விடயங்களை, நாம் இன்றைய இந்த முதல் சந்திப்பிலேயே ஆராய ஆரம்பித்துள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது.

அதிபர் நண்பர் பரமேஸ்வரன் கல்வி வளர்ச்சித்துறைக்கு தகைமையானவர் என்ற காரணத்தாலேயே, சிலகாலமாக அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வந்தேன். நானும், அவரும் கலந்து பேசி கண்ட கனவு இன்று நனவாகின்றது. பரமேஸ்வரனுடன் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்கிறீர்கள். எமது நோக்கங்களை சிறப்பாக நண்பர் பரமேஸ்வரன் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்று இங்கே தவிர்க்க முடியாமல் வருகை தர முடியாத பேராசிரியர் மூக்கையா, பேராசிரியர் கலாநிதி. கணேசமூர்த்தி, பேராசிரியர் சந்திரபோஸ், பேராசிரியர் யோகராஜா, திரு. எஸ். தில்லைநடராஜா உட்பட மிகப்பல கல்வியியலாளர்கள், ஆர்வலர்கள், தமது ஒத்துழைப்புகளை நல்குவதாக செய்தி அனுப்பியுள்ளனர். இவை எல்லாம் மகிழ்வையும், நம்பிக்கையையும் தருகின்றன.

தமிழர்களாகிய நாம் எமக்கிடையேயான தனிப்பட்ட முரண்பாடுகளை தள்ளி வைத்து விட்டு, எமது அனைத்து வளங்களையும் ஒன்று திரட்டி பணியாற்ற வேண்டிய காலம் இதுவாகும். அந்த பணி வரிசையில் கல்விப்பணி, முதல் மூன்று, முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற வேண்டும் என்பது எனது நிலைப்பாடு.

நமது நாட்டு அரசாங்கம் செயற்படும் கொழும்பை மையமாக கொண்டு தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம் செயற்பட்டாலும், கழகத்தின் வீச்சு முழுநாட்டினதும் தமிழர் கல்வி கட்டமைப்பை தழுவியதாக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஆகவே இந்த கழக வலையமைப்பு இன்னமும் விரிவு படுத்தப்பட வேண்டும் என நான் முன்மொழிகிறேன். மக்கள் பிரதிநிதியாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்படும் கல்வி விவகாரங்களுக்கு பாராளுமன்றம், அமைச்சு கலந்துரையாடல்கள், மாகாணசபை, வலயம், கோட்டம் உள்ளிட்ட தேசிய, மாகாண கல்வி கட்டமைப்புகளின் ஊடாக தீர்வுகளை தேடித்தர நான் கடமைப்பட்டுள்ளேன்.

# மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் மாவட்டச் செயலக நுழைவாயிலை மறித்தும் கடற்றொழில் திணைக்களத்தின் செயற்பாபாட்டை கண்டித்தும் போராட்டம்



(12-10-2023)

கடற்தொழிலில் ஈடுபடும் தமக்கு தொழில் ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் பாஸ் நடைமுறை மற்றும் மன்னார் கடற்றொழில் திணைக்களத்தின் செயற்பாட்டை கண்டித்து மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் வியாழக்கிழமை (12) காலை 11.45 மணி அளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் முன் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பள்ளிமுனை கடற்கரையில் இருந்து அட்டை பிடிக்க கடலுக்குச் செல்லும் பள்ளிமுனை கிராம மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதோடு,மன்னார் கடற்றொழில் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைவாக கடற்படையினர் இடையூரை ஏற்படுத்துவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் (12) வியாழக்கிழமை அன்று காலை பள்ளிமுனை கடற்கரையில் இருந்து கடலட்டை பிடிக்க தொழிலுக்குச் செல்ல முயன்ற போது தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

படகு ஒன்றில் 3 பேர் மாத்திரமே செல்ல முடியும் என கடற்படை அறிவித்தமையினால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தாம் பாஸ் நடை முறையினால் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்து பள்ளிமுனை கிராம மக்கள் தமது கிராமத்தில் இருந்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாவட்டச் செயலகம் வரை வருகை தந்து மாவட்டச் செயலக பிரதான நுழை வாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலில் பிடிபடும் ஒவ்வொரு வகையான கடல் உணவுகளுக்கும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமா?,வாழ்வாதாரத்துக்கு வழியில்லாமல் மீன்பிடியில் ஈடுபடும் போது ஏன் எங்களை கடலுக்குள் செல்ல தடை விதிக்கின்றீர்கள்?, சுதந்திரமாக வடபகுதி கடலில் தொழில் செய்த எங்களுக்கு ஏன் இப்போது தடை?, உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் கடல் தொழிலுக்குச் செல்லும் போது கடற்படையினர் எங்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குகின்ற போதும்,மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் தமக்கு பாரிய இடையூரை ஏற்படுத்துவதாகவும், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமையவே கடற்படையினர் கெடுபிடிகளை மேற் கொள்ளுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

எனவே கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களுக்கு தொழில் ரீதியாக வழங்கப்படும் தனித்தனி பாஸ் நடைமுறை நிறுத்தப்பட்டு பொதுவான பாஸ் வழங்கப்பட வேண்டும் எனவும்,அட்டை பிடிக்க செல்லும் போது படகு ஒன்றில் மூவர் மட்டுமே செல்ல முடியும் என்ற கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும் எனவும்,மன்னார் கடற்றொழில் திணைக்களம் மனிதாபிமானத்துடன் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாலும் வெடித்தது போராட்டம்!



அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் தொழிற்சங்க கூட்டுக்குழு ஆகியவற்றின் 01.10.2023 தீர்மானத்திற்கமைவாக வியாழக்கிழமை அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் போன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில் வியாழக்கிழமையன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக பணியாளர்களை பாதிக்கும் பிரச்சனைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசாங்கத்தின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தீர்வினை வேண்டியுமே அடையாள ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மதியம் 12.00 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் “மொழித் தேர்ச்சி கொடுப்பனவை மீள் வழங்கு, பல்கலைக்கழக ஊழியர்களின் இல்லாமல் ஆக்கப்பட்ட சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, ஊழியர்களின் சேமலாப, நம்பிக்கை ஓய்வூதிய நிதிகளை கொள்ளையடிக்காதே, அரசே அரச பல்கலைக்கழக முறைமையை காப்பாற்று, வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் சம்பள அதிகரிப்பை வழங்கு” உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# Catholic Bishops in Sri Lanka Demand Intelligence Reports About Easter Bombings

- by Siva Parameswaran

Over a dozen senior Catholic clerics from Sri Lanka have urged President Ranil Wickremesinghe to release the intelligence reports received prior to the Easter Sunday bombings four years back.

In an open letter to the President, they have also chided his divide-and-rule policy of trying to split the Catholic Church in the island nation.

Pointing out to his interview with journalist Martin Gak of the German National Broadcaster-Deutsche Welle News, in which Wickremesinghe said his dealings with the Catholic Church were with the Bishops' Conference of Sri Lanka and not with the Cardinal, the clergy said "It should be noted that the Cardinal being the Archbishop of Colombo is not "sui generis" (existing alone) but is an integral and most vital Conference member of the Catholic Bishops' Conference (CBCSL) in Sri Lanka, Hency, any reference to the Cardinal by Your Excellency in a singular manner undermines the collegiality of the CBCSL".

The CBCSL comprises the Bishops of twelve Dioceses in Sri Lanka and three Auxiliary Bishops of Colombo.

While thanking the President for handing over all the volumes of the Presidential Commission of Inquiry report into the Easter Sunday bomb attacks to them, they have urged him to share the intelligence reports from various nations as said by him in the interview.

"In furtherance of same, Your Excellency further stated in the interview that the Federal Bureau of Investigation (FBI), the British Police, the Australian, the Indian, the Chinese, and the Pakistani secret services have given reports concerning the attack".

Adding further CBCSL said the fact has been brought to the attention of the general public as well as them for the first time.

"In these circumstances, it would be appreciated if you could share with us the copies of the said reports as well".

The deadly Easter Day bombings carried out by the members of the National Towheed Jamath killed over 275 including foreigners. As many eight blasts happened in the capital city of Colombo, its suburbs, and the Eastern city of Batticaloa.

A recent documentary by British Broadcaster Channel 4 exposed an alleged link between the State Intelligence Services and the bombers. In the documentary Asad Maulana - an erstwhile close associate and spokesperson of now-state minister Sivanesathurai Chandrakanthan aka Pillayan - claimed, it was he, who at the behest of Pillayan, arranged the meeting between the suicide bombers and Suresh Sally, the then chief of the country's intelligence to facilitate ousted President Gotabaya Rajapaksha to be elected as the President.

The open letter has been signed by Rt. Rev. Dr. Harold A. Perera, Bishop of Kurunegala, Rt. Rev. Dr. Noel C. Edmond, Bishop of Trincomalee, Rt. Rev. Dr. J.D. Anthony Jayakody, Auxiliary Bishop of Colombo, Cardinal Malcom Ranjith, Archbishop of Colombo, Rt. Rev. Dr. D. Valence Mendis, Bishop of Kandy, Rt. Rev. Dr. Norbert M. Andradi, Bishop of Anuradhapura, Rt. Rev. Dr.Cletus C. Perera, Bishop of Ratnapura, Rt. Rev. Dr. F. L. Emmanuel Fernando, Bishop of Mannar, Rt. Rev. Dr. Raymond K. Wickramasinghe, Bishop of Galle, Rt. Rev. Dr. Justin Bernard Gnanapragasam, Bishop of Mannar, Rt. Rev. Dr. Jospeh Ponniah, Bishop of Batticaloa, Rt. Rev. Dr. Dr. Jude Nishantha Siva, Bishop of Badulla, Rt. Rev. Dr. P. Anton Ranjith, Auxiliary Bishop of Colombo and Rt. Rev. Dr. Maxwell G. Silva, Auxiliary Bishop of Colombo.

# Civil Society Activist in East Lanka Alleges "death threat by an armed group"

- by Siva Parameswaran

A Tamil civil society activist in Eastern Sri Lanka has been threatened with death for his comments about Sivanesathurai Chandrakanthan a Rajapaksha protégé and state minister.

Wimalasena Lavakumar speaking to media persons in Batticaloa claimed a group of six people armed with guns came to his house late night on October 2nd and threatened him with death.

His house in Kiran is the native village of Vinayagamoorthy Muralitharan aka Karuna Amman founder of Tamil Makkal Viduthalai Pulikal (TMVP) a stronghold of the party.

Lavakumar in an interview with a popular social media in mid-September had claimed "Pillayan group carried out abductions in association with the Sri Lankan Government".

In the same interview, he also spoke about a camp in Theevuchchenai allegedly a notorious place for torture by the Pillayan group, where many were taken to be never seen again. Among those who went missing in such a way was Dr.Ravindranath a former Vice Chancellor of the Eastern University.

Expressing fear for his life Wimalasena Lavakumar narrated his ordeal when unidentified armed men came to his house issuing a death threat.

"There were six altogether in three motorbikes. They said that I have opened my mouth about many things in Batticaloa and that I have to stop those activities immediately. "You speak about many unnecessary things," they told me. In addition, they threatened me saying, "Theevuchchenai is a… a… hidden matter. You don't start talking about it or going digging. You were wrong to do that. Today we came to bump you off. But first, this is a warning. Your type are the ones who force us to dust our weapons and carry them again. If you engage in such activity once more, we will definitely kill you".

Describing those who issued a death threat to him, Lavakumar added two of them were in blue denim with coloured T-shirts and the rest four were in black dresses and spoke in the local dialect.

"The one in a blue denim and a civilian T-shirt had an AK-47 and those in the black dress had one had a T56 and an AK-47"

He further emphasized that such threats can only be made by the government intelligence or other armed groups working with the government.

"I am pretty certain that none other than state intelligence units and paramilitaries affiliated to the government are able to carry out such acts. Because, be it abductions during the past period, be it genocide, be it killings; as no proper investigation has been conducted to find out the many illegal acts committed by these and no one connected to these offences have been brought to justice and punished, they have been able to once again, freely engage in this weapons culture, death threats and abduction of people."

Lavakumar fearing for his life warned, in the event of any danger to his life, the military intelligence agencies, state intelligence agencies and groups working with them would be responsible.

He has also lodged a complaint to the Sri Lanka Human Rights Commission and to the Valachenai police about the threat to his life.

Theeivuchchenai camp is notoriously known for the murder of seven members of the Tamil's Rehabilitation Organisation (TRO) in January 2006 which happened within two months of Mahindra Rajapaksa being elected as President for the first time in 2005.

Media reports from the time say the TRO staff were returning to Vanni from Batticaloa when they were abducted near Welikande in a white van without license plates and apparently taken to the Theevuchenai camp and allegedly tortured and killed by the TMVP's armed group. The only female member in the group-Thanushkodi Premini (25) was brutally raped before being executed. Even elderly persons like Kasinathan Ganeshalingam (53) were not spared. The Karuna group of which Pillayan was considered the military head was directly involved in the cold-blooded execution the media reported at that time. The killings were never inquired into and the perpetrators were brought to justice.

# One-Third of Sri Lankans Prefer Military Rule Says a Global Survey

- by Siva Parameswaran

Is a Military Government suitable for Sri Lanka?

At least a third of its citizens feel so, if a survey done by the Open Society Foundations is to be believed.

Regarding the question if army rule is a good way of running a country, 34% of Sri Lankans surveyed agreed with it, although the details of the sample size and its breakup are not known.

Egypt tops the chart for that question with a rating of 63% indicating that over two-thirds of the countrymen favour military rule.

"Authoritarianism appeals to some, especially the young. Just 57 percent of 18 to 35-year-olds think democracy is preferable to any other form of government, compared to 71 percent of older respondents", the survey says.

Mark Malloch-Brown, President, Open Society Foundations in his foreword to the report although has emphasized the reports of democracy's demise are greatly exaggerated.

"In fact, it has a strong pulse. And the gravest threat it faces is not the rival appeal of authoritarianism but rather the question of whether democratic leaders can deliver for their populations. People want to believe in open societies in which checks on power, pluralistic and independent institutions, minority protections, and individual rights enable all to participate. But the evidence of that model improving their lives is all-too-patchy".

People in Sri Lanka believe Economic and Social rights matter to them more than Civil and Political Rights according to the survey.

The Economic and Social rights mattered most to 43% of Sri Lankans while those favouring Civil and Political Rights stood at 31%.

"The perception that civil and political rights are prioritized in high-income countries and economic and social rights are prioritized in middle- and low-income countries does not appear to hold true. When asked to choose from a list, 41 percent of respondents globally said the rights to food, housing, education, health, and social security were the most relevant to them", the authors said in their analysis.

An overwhelming 71% of Sri Lankans among those surveyed want countries to open more safer and legal routes for refugees. It is surprising in the survey that the same number of Indians have replied similarly.

Nearly half of those surveyed in the island nation believe China's rise will have a positive impact on their country, while the survey predicted by 2030 China will be the most influential nation on the globe followed by the United States with 32% and 26% respectively.

Sri Lanka is almost on par with the global rating on the Human Rights aspect of this survey with 74 percentage points.

"Corruption is seen as the biggest national problem. When asked about the most important challenge facing their country, respondents chose corruption. Trust in national and local politicians was low in most of the countries polled" the survey found.

Political violence issue also finds a place in the survey. "Political violence is a palpable fear. Fifty-eight percent and majorities in 21 of the countries polled are worried that political unrest in their countries could lead to violence in the next year".


The survey says only 14% of Sri Lankans trust national politicians to work in their best interests; which is topped by China where the response is 76% followed by Bangladesh.

The Open Society Foundations surveyed 36,344 respondents across 30 countries. However, the country-specific sample size has not been revealed in respect of each country.

"In each country, we aimed to survey a statistically representative sample of 1,000 people aged 18 and older. Some countries, due to polling limitations or smaller population size, had a lower sample size".

Respondents were asked 45 questions out of which 43 were asked globally and two of which were specific to the region where the respondent was from. The questions asked in the survey were based on themes including international finance and debt, human rights, international solidarity, governance, and global challenges.

The survey report is authored by Chanu Peiris and Natalie Samarasinghe.




Canada | EMPLOYMENT ONTARIO | Ontario

SCAN TO REGISTER

தொழில் அமைச்சு, குடிவரவு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) ஆகியவற்றுடன் இணைந்து CSI 'ஸ்காபரோ ஹப்' நிகழ்ச்சித் திட்டம்' முன்னெடுக்கப்படுகிறது.

இலத்திரனியல் தொழிநுட்ப துறையில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்புக்குத் தயாராகும் விதத்தில் அதி நவீன நடைமுறைப் பயிற்சியுடனான கல்வித் திட்டம்.

சிக்கலான சர்க்யூட் போர்டுகளை எவ்வாறு பொருத்துவது, பழுதைக் கண்டறிவது, சரி பார்ப்பது மற்றும் திருத்துவைத்து பற்றிய அறிவைப் பங்கேற்பாளர்கள் பெறுவார்கள்.



இந்நிகழ்ச்சித் திட்டம் MLITSD இன் முக்கிய நோக்கோடு ஏற்புடையதாகும்:

- வேகமாக மாறி வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப அதை எதிர்கொள்ளக் கூடிய பணியாளர்களை உருவாக்குதல்
- வேலை தேடுபவர்களுக்கு பணி நுழைவுக்கான தடைகள் நீக்க வழி வகுத்தல்
- அதிகரித்து வரும் தொழிலாளர் சந்தையின் தேவைகளை சந்திக்க வேலை வழங்குவோருடன் நேரடியாக கூட்டுச் சேர்த்தல்

## CSI இலத்திரனியல் தொழிநுட்பப் பயிற்சி

**இலவச பயிற்சி வழங்கப்படுகிறது**

- 4-மாத பாடத் திட்டம்
- எங்கள் அதிநவீனத்தில் பயிற்சி கூடத்தில் நடைமுறைப் பயிற்சி
- வேலைவாய்ப்பு உதவி



மேலும் விவரங்கள் அறிய மற்றும் விண்ணப்பிக்க:

https://www.thecsi.com/skills-development-program.html

# Congratulations

to

# Canada Uthayan

## on your 27th Anniversary

உங்கள் 27வது ஆண்டு நிறைவுக்கு
எனது வாழ்த்துக்கள்!



**Raymond Cho**
MPP - Scarborough North

Ontario

**Constituency Office**
Unit B, 4559 Sheppard Ave E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca










உதயன் பல்சுவைக் கலை விழா"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் தமிழர் வர்த்தக நிலையங்கள் எதிர்வரும் ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுரோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பல்சுவைக் கலைவிழா" வில் நடனம் நகைச்சுவை கவிதை அரங்கு மற்றும் "ஆரோசை" இசைக் குழுவினர் நீண்ட மெல்லிசை நிகழ்ச்சி. இதில்"பொன்னியின் செல்வன்" புகழ் வி. எம். மகாலிங்கம் சிறப்புப் பாடகராக தோன்றுகின்றார்.

உதயன்"விழாவிற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் தற்போது பின்வரும் தமிழர் வர்த்தக நிலையங்களில் விற்பனையாகின்றன.

1.கென்னடி-எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனத்தில். தொலைபேசி:416 298 1598

2. மார்க்கம்-பெக்ஸிக்கன் சந்திப்பில் அமைந்துள்ள Majestic City வர்த்தக வளாகத்தில் Imma Trading Company தொலைபேசி: 416 609 0827.

3. கென்னடி-எக்ளின்டன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில். தொலைபேசி: 416 759 4916

# மரண அறிவித்தல்

**தோற்றம்:**
**20 - 06 - 1938**



**மறைவு:**
**12 - 10 - 2023**

# திருமதி. தவமலர் இராசையா

(யாழ் இணுவில் கிழக்கு)

**யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவமலர் இராசையா அவர்கள் 12-10-2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. இராசா - நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும், திரு.திருமதி. கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற திரு. இராசையா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இலங்கை நீர்ப்பபாசனத் திணைக்களம். Technical Officer) அவர்களின் அன்பு மனைவியும்,

சசிகலா (ஜேர்மனி), மோகனதாஸன் (கனடா), உதயதாசன் (ஜேர்மனி), சதீஸ்வரி (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சந்திரவதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். மகேந்திரன், ஜெயரூபி (சாந்தி), தவச்செல்வி (அருந்தி), ஜெயபாலன் (ஜெயா), பன்னீர்ச்செல்வம் (செல்வம்), சந்திரகுமார் (ராஜன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்ற கனகலிங்கம். பரமலிங்கம், குமாரலிங்கம், காலஞ்சென்ற மருதலிங்கம், இரத்தினசிங்கம், சரஸ்வதி (சுவிஸ்), பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, செலவநாயகம், செல்லத்துரை, நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

பிரசாத், பிரசன்னா, பிரவீனா, சுபாங்கி, யதீசன், உஷாந், உஷானா, உஷாஜி, சிந்து, சினோயா, ஜெனுசன், சுஜீபன், சஜீபன், சஜானி, சங்கீத், சகானா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,

இனாயா, சஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக *14-10-2023* சனிக்கிழமை மதியம் *11:30* தொடக்கம் *3:30* மணிவரையும் Chepal Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham ON L3R 5G1, Canada) இல் வைக்கப்பட்டு பின்னார் *15-10-2023* ஞாயிற்றுக்கிழமை காலை *6:00* தொடக்கம் *8:30* மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் Forest Lawn Cremation (4570 Yonge Street, Toronto ON) இல் *9:15* மணிக்கு தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| மோகன் (மகன்): (647) 806-8435 | உதயன் (மகன்): 49 1 76 22200279 |
| கலா (மகள்): 49 22 4173335 | ஈஸ் (மகள்): 49 22 85509778 |
| சாந்தி (மகள்): 49 22 83691957 | வதனி (மகள்): 41 44 3010226 |

# தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்த நீலகிரி வரையாடு திட்டம்: சிறப்பு அம்சங்கள்

இந்திய செய்திகள்

தமிழகத்தின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்கான முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் (அக்.12) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழகத்தின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழக அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார்.

மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகங்களை வழங்கினார்.''வரையாடு'' என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் ''நீலகிரி வரையாடு'' என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும். இது புவிசார்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்றது. இந்த மலை ஆடுகளை "மவுண்டன் மோனார்க்" என்று அழைக்கிறார்கள்.2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் சங்க இலக்கியங்களில் நீலகிரி வரையாட்டைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தின் ஐம்பெரும் காப்பியங்களில், சிலப்பதிகாரம் மற்றும் சீவக சிந்தாமணியில், நீலகிரி வரையாடு மற்றும் அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், பதினெண்மேல்கணக்கு நூல்களான நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை



போன்ற நூல்களில் நீலகிரி வரையாடு பற்றி விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி 16001700இல் திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகத்தில் நீலகிரி வரையாடு குறித்து "குறத்தி மலை வளம் கூறல்'' என்ற பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது. வரையாடு இப்பகுதியின் பல்லுயிர் செழுமையைக் குறிக்கும் விலங்குகளில் ஒன்றாகும். தமிழகத்தில் அதன் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்துக்கு சான்றாக, நீலகிரி வரையாடு தமிழகத்தின் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி வரையாடு திட்டமானது, நீலகிரி வரையாடு பற்றிய எண்ணிக்கை, விநியோகம் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை உருவாக்குதல்; நீலகிரி வரையாட்டின் வரலாற்று வாழ்விடங்களை மீண்டும் அறிமுகப்படுத்துதல்; நீலகிரி வரையாட்டுக்கு உள்ள அச்சுறுத்தலை நிவர்த்தி செய்தல்; "நீலகிரி வரையாடு" இனங்கள் பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே அதிகரிக்கச் செய்தல்; நீலகிரி வரையாடு தினம் 1975 இல் நீலகிரி வரையாடு பற்றிய முதல் ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த டாக்டர் ஈ.ஆர்.சி டேவிதாரின் பிறந்த நாளான அக்டோபர் 7 ஆம் நாள் நீலகிரி வரையாடு தினமாக அவரை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது.''நீலகிரி வரையாடு'' உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சுற்றுச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை உருவாக்குதல்; பள்ளி மாணவர்களுக்கு நீலகிரி வரையாடு குறித்த பாடங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் குறிக்கும் வகையில் டிசம்பர், 2022ல் அரசாணை வெளியிடப்பட்டது.

இந்தத் திட்டம் ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், வரையாடுகளின் வரம்பு முழுவதும் தரப்படுத்தப்பட்ட முறைகளை பயன்படுத்தி ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் நடத்துதல், நீலகிரி வரையாட்டினை மறு அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்பு, பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல், பணியாளர்களுக்கு கள உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளித்தல், மேல் பவானியில் உள்ள சோலா புல்வெளியில் முன்னோடியான மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளுதல், சூழல் சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல், தகவல் தொடர்பு மற்றும் எல்லை போன்றவை குறித்த முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும். நீலகிரி வரையாடு திட்டப்பணிகளை செயல்படுத்த திட்ட அலுவலகம் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு முழு நேர முதல் திட்ட இயக்குனரையும் அரசு நியமித்து ஆணை வெளியிட்டு, பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒரு மூத்த விஞ் ஞானியையும் நியமனம் செய்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக இளைஞர்களுக்கு கட்டணமில்லா 'கோடிங்' பயிற்சி சென்னை ஐஐடி தொடக்கம்

தமிழக இளைஞர்களுக்கு கட்டணமின்றி கோடிங் பயிற்சி அளிக்கும் வகையில் சென்னை ஐஐடி ன் தொழில் ஊக்குவிப்பு நிறுவனமான குவி, 'நான் முதல்வன்தமிழ்நாடு கோடர்ஸ் பிரீமியர் லீக்'கைத் தொடங்கியுள்ளது.இது தொடர்பாக சென்னை ஐஐடி வெளியிட்டுள்ள அறிக்கை: "சென்னை ஐஐடி, ஐஐஎம் அகமதாபாத் ஆகியவற்றின் தொழில் ஊக்குவிப்பு நிறுவனமான குவி (GUVI) தமிழ்நாட்டில் ஒரு லட்சம் பொறியியல் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக ஹேக்கத்தான்கள் மூலம் பயிற்சி அளிக்கும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. 'நான் முதல்வன் தமிழ்நாடு கோடர்ஸ் பிரீமியர் லீக் (NM-TNcpl) என்றழைக்கப்படும் இந்த முயற்சிக்காக, தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றோடு இந்நிறுவனம் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளது.NM-TNcpl எனப்படும் இத்திட்டத்தின் மூலம் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் ஹேக்கத்தான்கள் நடத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள ஆர்வமுள்ள பொறியியல் மாணவமாணவிகள் தங்களின் கோடிங் திறமையை வெளிப்படுத்தவும், மதிப்புமிக்க வாய்ப்புகளைப் பெறவும் இலவசமாகக் கிடைக்கும் தளமாக இருக்கும். இந்த தொடர் ஹேக்கத்தான் மூலம், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சிக்கலான அறிக்கைகளுக்கு தீர்வு காணவும், அவற்றைச் சமாளிக்க புதுமையான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கவும் மாணவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள். முன்னோடியான இந்த முன்முயற்சியை தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 6ம் தேதி சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார். ஆர்வமுள்ள பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் எந்த டொமைனில் இருந்தும் NM-TNcpl திட்டத்தில் பங்கேற்கலாம். பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி அவர்கள் இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம்

https://bit.ly/3ZJhjsw. தகவல் தொழில் நுட்பம் மற்றும் மென்பொருள் துறைகளில் ஆர்வமுள்ளவர்கள் சுயவேகக் கற்றல் வாயிலாக தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகள், ஜென் கிளாஸ் கேரியர் புரோகிராம்ஸ் மற்றும் குறிப்பிட்ட பிரிவினர் பயன்படுத்தும் எட்டெக் (ணிபீஜீமீநீ) சேவைகள் பற்றியும் கற்க குவி உறுதுணையாக நிற்கிறது. மாணவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே கற்க ஏதுவாக ஆன்லைன் தளத்தை இந்நிறுவனம் உருவாக்கி இருப்பதுடன், அவர்களின் திறமையை மேம்படுத்தி பணிக்குத் தயார்படுத்த சிறப்புத் தகவல் தொழில்நுட்ப படிப்புகளையும் வழங்குகிறது.

திருச்செங்கோட்டில் கேஎஸ்ஆர் கல்வி நிறுவனங்கள், சேலம் அன்னபூர்ணா பொறியியல் கல்லூரி மற்றும் பல கல்லூரிகள் இந்த மாபெரும் ஹேக்கத்தான் தொடரை நடத்தும் தொடர்பு மையங்களாக குவியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்த முன்முயற்சியின் முக்கியத்துவம் குறித்து விளக்கிய, குவியின் நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான எம்.அருண்பிரகாஷ், "தமிழ்நாட்டின் இளைஞர்களை மேம்படுத்தும் எங்கள் பணியில் NM-TNcpl திட்டம் ஒரு மைல்கல்லாகும். தொழில்நுட்பத்திற்கும் கல்விக்கும் எதையும் மாற்றும் சக்தி உண்டு என்பது எனது திடமான நம்பிக்கை. தரமான தொழில்நுட்பக் கல்வியை அனைவரும் அணுகும் இலக்குடன் எங்களது குழு இப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறது. அத்துடன் NM-TNcpl எங்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக விளங்குகிறது" எனக் குறிப்பிட்டார்.மேலும் அவர், "NM-TNcpl கோடர்களுக்கு போட்டிச்சூழலை வழங்குவது மட்டுமின்றி, கணக்கிலடங்கா வாய்ப்புகளையும் வழங்குகிறது.

குவியின் NM-TNcpl திட்டத்தில் இணைவதால் கிடைக்கும் முக்கிய நன்மைகள்: 1. இலவச திறன் மேம்பாட்டுப் படிப்புகள்: பங்கேற்பாளர்கள் குவி யில் இருந்து இலவச பிரீமியம் படிப்புகளுக்கான வாய்ப்புகளைப் பெறுவார்கள். இதனால் அவர்கள் கட்டணம் ஏதுமின்றி தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். உள்ளடக்கிய தன்மை, கல்வி மற்றும் திறன் வளர்ப்பு போன்றவை பரந்த அளவிலான மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய இந்த இலவச வாய்ப்பு ஊக்குவிக்கிறது. 2. நிபுணர் வழிகாட்டல்: நிலை1க்கு தகுதி பெற்றவர்கள், தரமான வழிகாட்டல், சிறந்த வாய்ப்புகள் கிடைத்தல் போன்றவற்றை உறுதி செய்யும் வகையில் சிறந்த நிறுவனங்களின் நிபுணர்களிடம் இருந்து வழிகாட்டலைப் பெற முடியும். 3. திறமையை வெளிக்காட்டல்: இத்திட்டத்தின் வாயிலாக மிகச் சிறந்த செயல்திறன் கொண்ட அணிகள் பட்டியலிடப்பட்டு, தொழில்நுட்பம் மற்றும் புரோகிராமில் அவர்களின் திறமையை வெளிக் கொணரும் வகையில் தளம் அமைத்துக் கொடுக்கப்படும்.

குவியின் NM-TNcpl திட்டத்தில் சிறந்த நிறுவனங்கள் மற்றும் சந்தையில் முன்னணியில் உள்ள பலர் கூட்டாண்மையில் இருப்பதால், தொழில்நுட்பத் துறையில் சிறந்த நிறுவனங்களின் உரிமையாளர்களிடம் மாணவர்களின் திறமையை எடுத்துரைக்கச் செய்ய முடியும். 4. நெட்வொர்க்கிங் வாய்ப்புகள்: பங்கேற்பாளர்கள் தங்கள் தொழில்முறை நெட்வொர்க்கை விரிவுபடுத்திக் கொள்ளும் வகையில் ஒரே மாதிரியான சிந்தனை உடைய தனிநபர்கள், தொழில் வல்லுநர்களுடன் இணைந்து செயல்படலாம். 5. பரிசுகளை அளித்தல்: கற்றல் மற்றும் போட்டி அனுபவங்கள் மட்டுமின்றி, தனிச்சிறப்பு கொண்ட அணிகளுக்கு பல்வேறு வழிகளில் வெகுமதிகள் கிடைக்கப் பெறும் வகையில் ரொக்கப் பரிசுகள் மற்றும் இண்டர்ன்ஷிப் வாய்ப்புகளை இந்த மகத்தான நிகழ்வு வழங்குகிறது. இந்த முன்முயற்சி குறித்துப் பேசிய குவியின் இணை இயக்குநரான பாலமுருகன் பழனிசாமி, "தொழில்நுட்ப உலகில் ஒவ்வொரு தனி நபரும், அவரவர் பின்னணியைப் பொருட்படுத்தாமல் ஏதோ ஒரு வாய்ப்புக்கு தகுதியானவர் என குவி உறுதியாக நம்புகிறது. இந்த நம்பிக்கையோடு தமிழகத்தில் உள்ள இளம்தலைமுறையினருக்கு சமமான வாய்ப்பை NM-TNcpl வழங்கியிருப்பதுடன், அனைவருக்கும் சமமான ஒரு களத்தை அமைத்துக் கொடுத்து, உள்ளடக்கிய தன்மையை மேம்படுத்துகிறது" எனத் தெரிவித்தார்.முதல்கட்டமாக பதிவுசெய்யும் செய்யும் நடைமுறைகளை முடித்தபின், TNcpl வழங்கும் அனைத்து சலுகைகள் குறித்தும் அறிந்து கொள்ளலாம். மூன்று பங்கேற்பாளர்கள் உறுப்பினர்கள் சேர்ந்தபின் ஒரு குழுவாக இயங்குவார்கள். பதிவு உறுதிசெய்யப்பட்ட உடன், அடுத்து வரவிருக்கும் ஹேக்கத்தான்கள், திறன்மேம்பாட்டு படிப்புகளுக்கு பங்கேற்கும் குழுக்கள் தயாராகிவிட வேண்டும். கல்லூரி ஆசிரியர்களுக்கு குவி வழங்கும் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்களை (FDPs) வழிகாட்டுநர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிஸில் நடைபெற்ற மணிவிழாவில் பூநகரிபொன். முருகவேள் தமிழ் இலக்கியச் சங்கம் வழங்கிய "நிறை தமிழ்" விருதுபெற்றார்



அயாழ்ப்பாணம் பூநகரி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அண்மையில் அவர்தம் மணிவிழாவினைச் சுவிஸ் தலைநகர் பேர்னில் பெருவிழாவாக கொணடாடயவருமான பொன். முருகவேள் அவர்கள் அவர்தம்நண்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இணைந்திருக்க மதிப்பளிக்கப்பெற்றார். அது ஒரு பிறந்தநாள் விழாதான், ஆனால் தனிமனித விழாவாக இருக்கவில்லை மாறாக வள்ளுவரைப் பல்லக்கில் சுமக்கும் மணமுள்ள மணிவிழாவாகக்குறளேற்றிற்று.





மலேசியாவிலிருந்து வருகை தந்த தமிழ்ச் சொல்லாட்சியர் திரு. இரா. திருமாவளவன் திரு.திருமதி. முருகவேள் தம்பதிக்கு தமிழ் முறைப்படி மணிவிழாவினை இனிதே நடாத்தி வைத்தார்.

பேர்ண் சைவநெறிக் கூடம் சிவருசி சசிதரன், முருகவேள் தம்பதிக்கு அற்புதமாக மாலை அணிவித்துச் சபையை வியக்கவைத்தார்.

சமூகப் பணியாளர் பலருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் பலரும் பாராட்டுரைகளையும் வழங்கினர். மக்கள் தாமாக முன் வந்து தம்பதியைப் பாராட்டியது, முருகவேள் தம்பதியினர் வாழ்ந்த வாழ்வின் அறுவடையெனத் தோன்றிற்று.

இதுவொரு மணிவிழாதான், ஆனால் இயல், இசை, நாடகம் (ரமணனின் பேச்சே நாடகம்)என அரங்கு கலையால்நிறைந்தது.

தொடர்ந்து எழுத்தாளரும் பேச்சாளருமான கல்லாறு சதீஸ் அவர்கள் தலைமையில் "பூநகரியான் பொன். முருகவேள்" எனும் மணிவிழா மலர் வெளியிடப்பட்டது.

மலரினைச் துணைப் பேராசிரியர் திரு. சுவேந்திர ராசா அறிமுகம் செய்ய, கல்வியாளர் திரு. அருந்தவராஜா மதிப்புரையாற்றினார்.

இந்த மணிவிழா மலர் ஒரு மணிவிழாவுக்கு எப்படி ஒரு நூலைத் தயாரிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளதாக யாழ் பல்கலைக்கழக மேளாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராசா பாராட்டியுள்ளதனை மலரை வாசித்தபோது சாலப்பொருத்தம் என்று கூறலாம்.

கடந்த அறுபது ஆண்டு வாழ்வில் திரு. முருகவேள் தமிழுக்கு ஆற்றிய அளப்பரிய பணியினைப் பாராட்டிச் சுவிஸ்தமிழ் இலக்கியச் சங்கம் "நிறை தமிழ்" எனும் விருதினை வழங்கிக் கௌரவித்தது. விழாவில் சுவிற்சலாந்து தேசத்தின் அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தி: சுவிற்சலாந்திலிருந்து
-கலாநிதி கல்லாறு சதீஷ்-

# 'LUXURY HOMES WORLD BROKERAGE' நிறுவனதிற்கு விஜயம் செய்த மா – காண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி

கனடிய செய்திகள்
Canadian News




A New Real Estate Brokerage named 'LUXURY HOMES WORLD BROKERAGE' owned and operated by Susie & Inthiran had their Grand Opening Ceremony on Sunday, October 1st, 2023.

In order to congratulate the founders, our MPP Logan Kanapathi visited the Brokerage Head Office last Friday (06-10-2023). During his visit, he also presented a Scroll of Appreciation to the Founders Susie & Inthiran.

திரு.திருமதி. இந்திரன்-சுசி தம்பதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதிய 'LUXURY HOMES WORLD BROKERAGE' நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 01-10-2023 அன்று பிற்பகல் திறந்து வைக்கப்பெற்றது.

இந்த நிறுவனத்தின் உரிமையாளர்களை பாராட்டும் வகையில் எமது மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று (06-10-2023) மதியம் மேற்படி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு விஜயம் செய்து நிறுவனர்களைப் பாராட்டினார். தொடர்ந்து ஒன்றாரியோ மாகாண அரசின் சார்பில் வாழ்த்துப் பத்திரம் ஒன்றையும் வழங்கினார்.

இந்த நிறுவனம் 5762 HWY 7 Road - Unit 203, Markham, Ontario L3P 1A8 என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது.
தொலைபேசி இலக்கம்: (416) 706-5000.





TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# பொறுமையெனும் பேராற்றல் குறித்துத் திருவள்ளுவர் கூறுபவை...

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா
நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்
Jothy.thirukural@gmail.com



உலகிலே எத்தனை நூல்கள் இருந்தாலும் உலகோர் அனைவருக்கும் பொதுவான அறநெறிகளைத் தாங்கிய சிறந்த அறநூலாக விளங்குவது திருக்குறளாகும். திரு எனும் அடைமொழி கொண்டு தெய்வத்தன்மை மிகு நூலாக இந்நூல் விளங்குகின்றது. முக்காலத்தையும் அறியும் திறன்மிகு முப்பாட்டன் திருவள்ளுவரால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட இந்நூலினைப் பல்லின மக்களும் ஆய்வு செய்தும், கற்றும், கடைப்பிடித்தும் வருகின்றனர். மனிதவாழ்வில் ஈடேற்றம் பெறுவதற்கான அறவழிகளையும், நல்ல மானிடப் பண்புகளையும் அற்புதமாக எடுத்துரைக்கும் இந்நூலிற் தெய்வப்புலவர் திருவள்ளுவர் பொறுமை பற்றிக் கூறியவற்றை இக் கட்டுரை ஆராய்கின்றது.

பொறுமை என்ற வார்த்தையின் பொருள் "சகிப்புத்தன்மை" எனலாம். இதனையே திருவள்ளுவர், பிறர் எமக்குக் குற்றமிழைத்தாற் பதிலுக்கு நாம் அவர்களுக்குத் தீங்கு செய்யாது பொறுத்துக்கொள்ளுதல் பொறுமை என்கிறார். பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல பிறர் அறிந்தோ, அறியாமலோ எமக்குச் செய்யும் தீமைகளை நாம் மறந்து, மன்னித்து விடுவதே உயர்ந்த பண்பாடாகும் என்றும் குறிப்பிடுகிறார். பொறுமை மனிதனுக்கு மிகச் சிறந்த சொத்து என்பதனை உணர்ந்த திருவள்ளுவப் பெருந்தகை பொறுமை குறித்த அதிகாரத்திற்குப் பொறையுடைமையென்று பெயர் வைத்தார். உடைமை என்பது இங்கு சொத்தெனப் பொருள்படுகிறது. இவ்வதிகாரத்தின் மூலம் "பொறுமையானது உலக ஒற்றுமைக்கும், சமாதானத்திற்கும் வழி வகுக்கவல்லது" என்ற உட்பொருளை எமக்கு மிகத் தெளிவாக விளங்க வைத்துள்ளார்.

நிலமானது தன்னைத் தோண்டுபவர்களையும் சுமப்பது போல, நாமும் நம்மைக் காயப்படுத்துபவர்களையும் பொறுத்துப்போதலே மேன்மை என்கிறார். பின்வரும் திருக்குறளிற் பூமித்தாயின் உயர்ந்த பொறுமைக் குணத்தோடு பொறுமைசாலிகளை ஒப்பிட்டுள்ளமை மிக அற்புதமானது.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

(குறள் 151)

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நாம் பொறுமையைக் கடைப்பிடிப்பது என்பது மிகக் கடினமானது என்றும், "பொறுமைக்கும் எல்லையுண்டு" என்றும் நம்மிற் சிலர் கூறுவதை அவதானித்திருப்பீர்கள். நாம் சில இடங்களில் நியாயமற்ற முறையில் நடத்தப்படும்போதும், நம் நியாயமான எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போதும் பொறுமை இழந்துவிடுகின்றோம். அநீதிகளைக் கண்டு துடித்தெழுகின்றோம். அதர்மம் தலைதூக்கியிருக்கும் இடங்களில் எங்கள் பொறுமை வெகுவாகச் சோதிக்கப்படுகிறது. இருப்பினும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் ஒருவரால் மட்டுமே இந்த உலகில் உயர்ந்து நிற்க முடியும் என்ற தெய்வப்புலவனின் அருள்வாக்கை ஏற்று நடப்பதே சிறப்புகளைச் சேர்க்க வல்லது.

பொறுமையையும், நிதானத்தையும் தொலைத்தோமென்றால் இந்தப் பிரபஞ்சம் யுத்த களமாக மாறி எல்லோர் நிம்மதியும் தொலைந்துவிடும் என்பதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வன்முறைகளையும், வன்செயல்களையும் விடுத்து வேறு அறவழிகளில் இணக்கம் காணுதலே அனைவரதும் அமைதிக்கு வழிவகுக்கும் என்பதனையே திருவள்ளுவர் என்ற பெருஞானி எங்களுக்குப் புகட்டியுள்ளார். "பொறுமை கசப்பானது ஆனால் அது தரும் கனிகளோ இனிப்பானவை" என அரிஸ்டாட்டில் (Aristotle) மற்றும் ஜீன் ஜாக்ஸ் றூசோ (Jean Jacques Rousseau) போன்ற தத்துவ ஞானிகளின் பொன்மொழிகளையும் இங்கு நினைவுகூரலாம். ஆகவே பொறுமை பெருமைகளையும், வாழ்நாள் மகிமைகளையும், நம் இறப்பின் பின்பும் மங்காப் புகழினையும் தரவல்லது என்பதனைப் பின்வரும் குறளாற் திருவள்ளுவர் அறியத்தருகிறார்.

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.**

(குறள் 156)

பொறுமை எப்பொழுதும் எங்களை உயர்ந்த பண்பாளர்களாக்கும். வாழ்வின் ஒவ்வொரு பகுதிகளிலும் பொறுமை எமக்கு அவசியமானது. எமது திறமைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றக்கூடிய வலிமை பொறுமைக்கு உண்டு. நாங்கள் பொறுமையற்றவர்களாகும்போது எமது அமைதியை இழந்துவிடுவோம். எம்மிடமுள்ள நற்பண்புகள்கூட எம்மைவிட்டு நீங்கிவிடும். எமது நிம்மதியினைக்கூட நாம் தொலைத்துவிடுவோம். அதனால் நம்மிடமுள்ள தன்னம்பிக்கை அற்றுப்போய்விடும். தன்னம்பிக்கை எனும் மாபெரும் சக்தியை இழந்துவிடுவோமாயின் வாழ்விலே தோல்வியடைந்துவிடுவோம். ஆகவே எதிலும் பொறுமையுடனும், நிதானத்துடனும் செயலாற்றும்போதே நாம் நிறைவான மனிதர்களாக, சான்றாண்மை மிக்கவர்களாக வாழமுடியும். இதனையே திருவள்ளுவப் பேராசான் பின்வரும் குறட்பா மூலம் கூறுகிறார்.

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி யொழுகப் படும்.**

(குறள் 154)

எதையும் பொறுத்து, மன்னித்துப்போக இயலாதவர்கள் மற்றவர்கள் மீது கோபப்படுகிறார்கள். பிறர் மீது சீற்றம் கொள்பவர்களின் பகுத்தறிவானது மழுங்கடிக்கப்படுகிறது. அவர்கள் சக மனிதர்களைப் புண்படுத்தத் தயங்க மாட்டார்கள். தமது முரட்டுத்தனமான பண்பற்ற செயற்பாடுகளால் நல்ல நட்பை இழந்துவிடுவார்கள். எனவே பொறுமையின்மை என்பது உறவுகளை உடைக்கவல்லது. பொறுமையற்றவர்களை இந்த உலகம் ஒரு பொருட்டாக மதிக்காது. பொறுமைசாலிகளையே இந்த உலகு பொன்போலப் போற்றும். அவர்களே உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உறைவர். இதனைக் கீழ்வரும் குறளாலே திருவள்ளுவர் உலகத்திற்கு உணர்த்தியுள்ளார்.

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

(குறள் 155)

துன்பங்கண்டு துவளாமல், நின்று சாதிக்கும் வலிமை அதிகமாகப் பொறுமைசாலிகளுக்கே உண்டு. இவர்கள் நெகிழ்வுத் தன்மை மிக்கவர்களாகவும் எந்த ஒரு சவாலையும் சமாளிக்கக் கூடிய வலிமை மிக்கவர்களாகவும் இருப்பார்கள். இவர்களைப்போல் எதையும் தாங்கும் சக்தியை நாம் வளர்த்துக் கொள்ளவில்லையெனில் வாழ்விற் பல உயர்வுகளை இழந்துவிடுவோம். ஒரு யானையின் குணம்போன்று சோதனைகளையும் சாதனைகளாக்கும் ஆற்றல் மனிதனுக்கும் வேண்டுமென்பதனைப் போர்க்களத்து யானையின் சகிப்புத் தன்மையையும், மனத்திடத்தினையும் சுட்டிக்காட்டித் திருவள்ளுவம் நமக்கு வாழ வழிகாட்டுகிறது. இதனைக் கீழ்வரும் குறட்பா விளங்கவைக்கிறது.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**
**பட்டுப்பா டூன்றுங் களிறு.**

(குறள் 597)

வாழ்வில் நீங்களும் பல வெற்றியாளர்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்களது வெற்றிக்கு அவர்களின் திறமை மட்டுமே காரணம் என்று நாம் சொல்லிவிட முடியாது. அதற்கு அவர்களது விடாமுயற்சியே மிகப்பிரதான காரணமாகிறது எனலாம். பொறுமையும், நிதானமும் உள்ள ஒருவரால் மட்டுமே தனது இலக்கினை நோக்கி விடாமுயற்சியுடன் செயற்பட முடியும்.

இன்று உலகிலே எதையும் சமாளிக்க முடியாதவர்களாகப் பலரும் அவலப்படுவதைப் பார்க்கிறோம். இந்த அவசர உலகம் பலரைக் கோபமும், மன அழுத்தமும் உள்ளவர்களாக மாற்றிவிடுகிறது. பொறுமையின்றிக் கோபம் கொள்வதனால் எமது உடல் மற்றும் மனபலம் பாதிக்கப்படுகிறது. சினமானது எமது முகமலர்ச்சியையும், அகமகிழ்ச்சியையும் அழிக்கும் என்ற விழிப்புணர்வைத் திருவள்ளுவர் ஏற்படுத்தியுள்ளார். இதற்கு மிகச்சிறந்த அறிவுரையாகப் பின்வரும் குறள்களினைக் கூறியுள்ளார்.

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்.**

(குறள் 305)

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோ பிற**

(குறள் 304)

குற்றங்களை மட்டுமல்ல சிலரது முட்டாள்த்தனமான வார்த்தைகளையும் அவற்றினால் வரக்கூடிய தாக்கங்களையும் தாங்கிக்கொள்வது கடினம் தான். இருப்பினும் அறிவீனமாகப் பேசுபவர்களையும் நாம் பொறுத்துப்போக வேண்டுமென்கிறது திருக்குறள். நேர்மைப்பண்பு அற்றவர்களின் இழிந்த பண்பற்ற சொற்களைப் பொறுத்துப்போவதே எப்பொழுதும் பண்புடை மனிதரின் பெருங்குணம் என்பதனை நாலடியார் என்ற அற்புத அறநூலும் வலியுறுத்துகிறது.

**நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**
**தாரித் திருத்தல் தகுதி மற்று ஒரும்**
**புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்**
**சமழ்மையாக் கொண்டு விடும்.**

(நாலடியார் 72)

**இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

(குறள் 153)

வீட்டிற்கு வருகின்ற விருந்தினரைக் கவனித்து உபசரிப்பதென்பது மிக உயர்ந்த பண்பு. ஆனால் ஏதேனும் காரணங்களினால் அவர்களைக் கவனிக்க முடியாமை என்பது துன்பத்திலும் துன்பமாகும் என்பதுபோல, அறிவீனமான விடையங்களால் நமக்குத் துன்பமிழைப்போரையும் பொறுத்துப்போதலே வலிமையிலும் வலிமையென்கிறார்.

இவை மட்டுமல்ல நெறி தவறியவர்களின் வெஞ்சொற்களைப் பொறுத்துக்கொள்பவர்களை, உலக இன்பங்களில் மனத்தைச் செலுத்தாது ஆன்மீகப்பாதையிற் செல்லும் துறவியர்களைவிடத் தூயவர்கள் என்றும், தகுதியற்ற அறந்தாழ்ந்த விடையங்களை மற்றவர்கள் எமக்குச் செய்யினும் அதற்கு நாம் நொந்து அவர்களுக்குப் பதிலுக்கு அறமற்ற வகையில் எதிர்வினையாற்றக்கூடாது என்பன போன்ற சிறந்த அறிவுரைகளைத் தொடர்ந்துவரும் இரு குறட்பாக்களூடாக விளங்கவைக்கிறார்.

**துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

(குறள் 159)

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று.**

(குறள் 157)

கொக்கானது தண்ணீர் பாயும் மடையிற் சிறிய மீன்கள் ஓடும்போது அவற்றைக் கௌவிக்கொள்ளாது தமக்கான பெரிய மீன் வரும்வரையும் காத்திருப்பதுபோல, தன்னடக்கத்துடன் இருக்கும் எல்லோரையும் அவர்கள் அறிவில்லாதவர்களென்று நாம் அவர்களைத் தப்புக்கணக்குப் போட்டு இகழ முடியாது. அவர்கள் தமக்கான தகுந்த காலம் கருதிக் காத்திருக்கக்கூடுமென ஔவையார் மூதுரையிற் சிறப்பாகக் கூறியுள்ளமையையும் இங்கே நினைவுபடுத்தலாம்.

**அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா- மடைத்தலையில்**
**ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்**
**வாடி யிருக்குமாங் கொக்கு.**

(மூதுரை 16)

ஆகவே பொறுமையுடன் இருப்பதென்பது, எமது இயலாமையோ அல்லது எமது மென்மைத் தன்மையோ அல்ல. அது எங்களுக்குள் இருக்கும் மிகப்பெரும் வலிமையாகும். எனவே நாங்கள் எந்த இடத்திற் பொறுமை காக்க வேண்டும், எந்த இடத்தில் விரைந்து செயற்பட வேண்டும் என்பதிற் கவனமாக இருப்போமாயின் வாழ்வினை வெற்றிகரமாக வாழ முடியும்.

பொறுமை என்ற பெருங்குணம் எமக்கு மற்றவர்கள் மீது இரக்க உணர்வை வளர்க்க வல்லது. சிலர் தங்கள் பொறுமையற்ற அவசரத் தன்மைகளால் சக மனிதர்களின் நேர்மையான குணங்களைக் கூடப் புரிந்து கொள்ளாமல் நோகடித்து விடுகிறார்கள். அதனாற் தேவையற்ற முரண்பாடுகளும், மனக்கசப்புகளும், பிரிவுகளுமே எஞ்சிவிடுகின்றன. ஆதலால் மற்றவர்கள் தம் ஆணவ மிகுதியால் நமக்கு மிகையான துன்பங்களைச் செய்தாலும் அவர்களையும் நாம் எமது தகுதியால் வென்றுவிட வேண்டும் என்கிறார்.

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்.**

(குறள் 158)

பிறர் நமக்குச் செய்யும் குற்றங்களை நாம் பொறுத்தருள வேண்டும் என்று அறிவுரைத்த திருவள்ளுவர், அக் குற்றங்களையெல்லாம் மன்னித்து மறந்துவிடுவது இன்னும் உயர்ந்த மானிடப் பண்பு என்பதனைப் பின்வரும் குறட்பா மூலம் விளங்க வைக்கிறார்.

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

(குறள் 152)

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தந்தருளிய குறள்களின் வழி நின்று பொறுமையெனும் பேராற்றலைப் பெற்று நிறையுடை மாந்தராய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, ஏனையோரையும் வாழவைப்போம்.

**வாழ்க தமிழ்!**
**வாழ்க திருவள்ளுவம்!!**

# An Evening With MP Salma Zahid, Federal Member for Scarborough Centre Riding

# ஸ்காபுறோ மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களுடனான ஒரு மாலைப் பொழுது





மேற்படி வைபவம் கடந்த புதன்கிழமை மாலை ஸ்காபுறொவில் அமைந்துள்ள 'கென்னடி கொன்வென்சன் விழா மண்டபத்தில்' நடைபெற்றது.

சுமார் 400 அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் அங்கு கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களின் உரையை செவிமடுத்தனர். அழைக்கப்பெற்ற தமிழ் பேசும் அன்பர்களும் ஆதரவாளர்களும் அங்கு வருகை தந்து சல்மா சாகிட் அவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். அவர்களில் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி. அவரது பாரியார் மற்றும் ராம் ராம் குமார் உட்பட கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்களும் கலந்து கொண்டனர்.

# ஸ்காபுறோவில் இயங்கிவரும் "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" வெள்ளி விழா ஆண்டு கொண்டாடப்பெற்றது






ஸ்காபுறோவில் ஶ்ரீமதி ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களைக் குருவாகவும் நிறுவனராகவும் கொண்டு இயங்கிவரும் "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" வெள்ளி விழா ஆண்டு கடந்தஞாயிற்றுக்கிழமையன்று சீனக் கலாச்சார மண்டபத்தில் கொண்டாடப்பெற்றது

பிரதம விருந்தினராக சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

விழாவின் ஆரம்பத்தில் "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" மாணவ மாணவிகள் அனைவரும் நூற்றுக்கணக்கில் அட்டகாசமாக மேடையில் தோன்றி சபையோருக்கு வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து நடனநிகழ்ச்சிகள் ஆரம்பமாகியன.

ஆரம்ப நிலை மாணவ மாணவிகளிலிருந்து ஆசிரியர் தரத்தை எட்டியுள்ள மாணவிகள் வரை அனைவரும் தொடர்ச்சியாக கண்ணுக்கு விருந்தாக பல வகை நடனங்களை மேடையிஜல் சமர்ப்பித்தனர்.

நிறுவனத்தின் சிரேஸ்ட மாணவிகளின் சார்பில் குரு ஶ்ரீமதி ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களுக்கு உயர்ந்த கௌரவம் வழங்கப்பெற்றது. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த வெள்ளி விழா அனைவரை மகிழ்வித்துது என்றே கூறவேண்டும்.

# கனடா- ஸ்காபுறோ நகரில் மூன்று மேடைகளில் பாடி மகிழ்விக்க வந்துள்ள தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம்




இவ்வார இறுதியிலும் அதையடுத்து வரும் வார இறுதியிலும் கனடா- ஸ்காபுறோ நகரில் நடைபெறும் மூன்று விழாக்களில் ரசிகர்களை பாடி மகிழ்விக்க உள்ள தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம் இன்று புதன்கிழமை பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது மேற்படி மூன்று விழாக்களையும் ஏற்பாடு செய்திருக்கும் ஏற்பாட்டாளர்கள் மற்றும் அனுசரணை வழங்கும் வர்த்தக நண்பர்கள் அவரை வரவேற்றார்கள்.

எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோ குயின்பெலஸ் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ள **EETTV** யின் **KIDS OF TAMILS** விழாவிலும் மறுநாள் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பத்திரிகையின்பல்சுவைக் கலை விழா"விலும் அதனைத் தொடர்ந்து 21-10-2023 அன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள "பைரவி நுண்கலைக் கல்லூரியின் ஆண்டு விழாவிலும் தென்னிந்தியப் பாடகர் வி. எம்.மகாலிங்கம் இனிய பாடல்களை எமக்குத் தரவுள்ளார்.

இங்கு காணப்படும் படங்களில் பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் தி. ஜெயச்சந்திரன் மாஸ்டர். உதயன் பத்திரிகையின் நிறுவனரும் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் மற்றும் தொலைக்காட்சியின் அ திபர் ராஜ் ஆகியோரும் வர்த்தகப் பிரமுகர்களும் அவரை வரவேற்பதைக் காணலாம்.

2000 அருள்நிறை மரியே செபத்தொடர் ஐப்பசி 14ம் திகதி

2001ம் ஆண்டிலிருந்து இவ் பக்தி முயற்;சியானது நடைபெற்று வருகிறது. இவ்வருட செப வழிபாடானது எம் உள்ளத்திலும், இல்லத்திலும,; பல இடர்பாடுகள் மத்தியில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் துன்பதுயரங்கள் மற்றும் நெருக்கடிகளிலும் இருந்து விடிவு பெறவும் முழுதின வழிபாட்டை ன்னெடுத்துள்ளோம். இதில் நாம் அனைவரும் பங்குபற்றி செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்கிறோம்.

திகதி: அக்டோபர் 14ம் திகதி சனிக்கிழமை,2023
இடம்: தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு ஆலயம்
நேரம் காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை

கிறஸ்தவர்கள் அனைவரும் இத்தொடர் செபமாலையில் ஒரே குடும்பமாக பங்குபற்றி மேல் சொல்லப்பட்ட கருத்துக்களுக்காக செபிப்போம்.

மேலதிக விபரங்களுக்கு

அருட்திரு. கொலின்ஸ் சார்ள்ஸ் அடிகளார் 416 264 6544



# ஒரு கப்பல் சேவையும் பல கேள்விகளும்

**- நடராசா லோகதயாளன்**

காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினத்திற்கான பயணிகள் கப்பல் சேவை ஏற்படுத்தியுள்ள எதிர்பார்ப்பினை நிறைவேற்றுமா என்பது குறித்து ஆரம்பத்திலேயே கேள்விகள் எழும்பியுள்ளன.

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையேயான பயணிகள் கப்பல் சேவையின் வெள்ளோட்டம் இம்மதம் 8ஆம் திகதி ஆரம்பமானது. பயணிகள் சேவை 10ஆம் திகதி எனப்பட்டு பின்னர் 12 என்றனர். அது தற்போது 14இல் இருந்து ஆரம்பமாகும் எனக் கூறப்படுகின்றது. 12 ஆம் திகதி இலங்கையின் கப்பல்துறை அமைச்சருக்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட வேறு பணியின் காரணமாக தற்போதைய திகதியும் மாற்றப்படுவதாக அறிவிக்கக்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கை-இந்தியா இடையே பயணிப்பதற்காக நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு இதுவரை 36 பேரும் காங்கேசன்துறையில் இருந்து பயணிக்க 15 பேரும் மட்டுமே பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இந்த தரவுகள் ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தின் அடிப்படையிலானவை.

காங்கேசன்துறையில் இருந்து எந்தக் காலத்திலும் பயணிகள் சேவை இடம்பெற்றதே கிடையாது. அவ்வாறானால் அந்த துறைமுகம் அப்போதே பயணிகள் சேவைக்கு பொருத்தமற்ற இடம் எனக் கண்டுகொள்ளப்பட்டுள்ளதா எனவும் கேள்வி எழுந்தாலும் இந்தவாரத்தின் தொடக்கம்வரை (ஒக்டோபர் 9) இதுகாலம் கப்பல் சேவையற்ற புதியதோர் இடத்திற்கு இச்சேவை ஆரம்பிப்பதனால் யாருக்கு இலாபம் எனில், சிவ பக்தர்கள் இந்தியாவிற்கு யாத்திரிகர்களாகச் செல்வோர் மற்றும் வீட்டில் இடம்பெறும் சுபநிகழ்வுகளிற்கு இந்தியாவில் சென்று ஆடைகள் போன்றவற்றை கொள்வனவு செய்து வர விரும்புபவர்கள் மற்றும் வியாபர நோக்கம் கொண்டவர்களிற்கு இச்சேவை நன்மை பயக்கும் எனக் கருதப்படுகின்றது.


ஏனெனில், தற்போது பலாலியில் இருந்து சென்னைக்கு பயணிக்கும் விமானத்திற்கான சிட்டை இரு வழிக் கட்டணமாக 60 ஆயிரம் ரூபாவிற்கும் உட்பட்ட தொகையில் இருக்கும்போது கப்பலிற்கு 53 ஆயிரத்து 500 ரூபா செலுத்தி பயணிப்பார்களா என்பதே பெரிய கேள்விக்குரியாகவுள்ளது.

விமானப் பயணம் ஒரு மணிநேரமும் 20 நிமிடமாக உள்ளபோதும் இங்கே கப்பல் சேவை 4 மணி நேரமாகவும் பின்னர் நாகபட்டினத்தில் இருந்து சென்னைக்கு பயணிக்க மேலும் 6 மணிநேரம் ஆகும் என்பதால் அரை நாள் பயணத்தின் பின்பே சென்னையை அடைய முடிகின்றது.



இவையே இக்கப்பல் சேவையில் உள்ள மந்த நிலையாக இருக்கும் சூழலில் தற்போது 150 பயணிகள் மன்டும் பயணிக்கும் 4 மணிநேர பயணக் கப்பலிற்கு, பதிலாக 250 பயணிகள் பயணிக்கும் 2 மணிநேரத்தில் நாகபட்டினத்தை அடையும் கப்பலை இந்த சேவைகளில் ஈடுபடுத்தும் திட்டமும் இருப்பதனால் அந்த வகையான கப்பலை பயன்படுத்தும்போது கட்டணமும் குறைந்து, எடுத்துச் செல்லும் பொதியின் அளவும் அதிகரிப்பதோடு கப்பல் கட்டணமும் குறைவடையும். அப்போதுதான் கப்பல் சேவையை நாடும் பயணிகளின் தொகை அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது.

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்து தெரிவிக்கையில்:



“இலங்கை இந்தியா இடையிலான போக்குவரத்து அதிகரிப்பது தமிழ் நாட்டுடனான உறவையும் அதிகரிக்கும். 1940ற்கு முதல் இலங்கையிலேயே இரண்டாவது பெரிய துறைமுகமான ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக கப்பல் சேவை இடம்பெற்றது. இதேநேரம் கட்டணம் ஓர் பெரிய தொகையாகவே காணப்படுகின்றது”. இருந்தபோதும் கொண்டு வரும் பொதியின் அளவு அதிகம் என்பதனால் பயணிகளிற்கும் நட்டம் ஏற்படாது என்றார்.

இதேநேரம் குடாநாட்டின் பிரபல தனியார் வைத்தியசாலை மற்றும் மருந்தக உரிமையாளரான சி.குலேந்திரராஜா கருத்து தெரிவிக்கையில்:

“தற்போதைய சூழலில் வர்த்தக நோக்கில் அடிக்கடி பயணிக்கும் எம்போன்ற வர்த்தகர்களிற்கு கப்பல் சேவை வரப்பிரசாதமாகவே அமையும் இருப்பினும் பருவகால மழைக்காலம் மற்றும் பயணிகள் இன்மையால் இச்சேவை தடைப்படாதுவிடின் நேர விரயம், பிரயாணம் போன்றவற்றை கருத்தில்க்கொண்டு எம்போன்ற வர்த்தகர்கள் இங்கிருந்து பயணிக்கும்போது விமான சேவையினையும் இந்தியாவில் இருந்து திரும்பும்போது கட்டிப்பாக கப்பல் சேவையினையும் நாடுவார்கள்” என்றார்.

இதேநேரம் சங்காணையைச் சேர்ந் கட்டிடத் தொழிலாளியான 47 வயது ஜீவரஞ்சன் கருத்து தெரிவிக்கையில்:

“கப்பல் தொடர்பான செய்திகள் வெளிவந்தபோது இருவழிக் கட்டணம் 19 ஆயிரம், 20 ஆயிரம் என்றே செய்திகள் வெளவந்தன. அதனால் எம்போன்ற தொழிலாளர்களும் பயணித்து இந்திய ஆலயங்களையும் தரிசித்து எமது பிள்ளைகளிற்கும் இந்தியாவை காட்ட முடயும் என நம்பினோம். ஆனால் அந்த கட்டணம் எந்தக் காலத்திலும் இனி இல்லை என்பதனை தற்போது வெளியான கப்பல் கட்டணம் கட்டியம் கூறுகின்றது. இதனால் வீட்டில் உள்ளவர்களும் உறவுகளும் மீண்டும் ஏக்கப் பெருமூச்சே விடுகின்றனர்” என்றார்.

இரு நாடுகளிலும் பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இந்த கப்பல் சேவை அந்த எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்யுமா அல்லது ஏமாற்றத்தை அளிக்குமா என்பது அடுத்த சில மாதங்களில் தெரியவரும்.

ERAA PLAZA
5928 FINCH AVE EAST
SCARBOROUGH, M1B5P8
(647) 295-9299

value mobile

NEW TO CANADA?
COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!

5G ROGERS INFINITE

$42 PLUS TAX PER MONTH

தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

30GB DATA

UNLIMITED CANADA-WIDE WITH US CALLING
UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING
BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US

# SJV Father of Tamil Nationalism


## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 22)

*(Continued from last week)*

Democracy is a double-edged sword which can cut the holder as much as it could cut the enemy. When politicians lead the people and rouse them into frenzy, the herd follows the master or leader and falls into an abyss from which there is no escape.

We are now familiar with the birth of the Ilankai Tamil Arasuk Katchi (ITAK) popularly called Ceylon Federal Party. Since then, the communal and discriminatory policies adopted by successive Sinhalese governments, and the 1956 success of the Sinhalese Nationalist government under S.W.R.D. Bandaranaike, made the Federal Party the authentic voice of Tamil politics. It was formed on December 18, 1949 in Colombo following a split in the All-Ceylon Tamil Congress. A decisive step in the history of Tamil nationalism.





A discriminatory piece of legislation, enacted in 1948, and modified in 1949, was the Indian Citizenship Act, which details the conditions in which a person is a national of Ceylon (now Sri Lanka). Shortly after Ceylon gaining independence on 4 February 1948, the new Sinhalese dominated government of Ceylon under Prime Minister D.S. Senanayake introduced the Ceylon Citizenship Bill before Parliament. Outwardly the purpose of the Bill was to provide means of obtaining citizenship, but its real purpose was to discriminate against the Indian Tamils by denying them citizenship. The Bill stipulated that anyone wishing to obtain citizenship had to prove that their father was born in Ceylon i.e., that they were at least third generation immigrants. This was an impossible task for most Indian Tamils mostly underprivileged and unlettered. Few were at least third generation immigrants because they tended to return to India to give birth. Those who were at least third-generation immigrants rarely had the necessary documents because they rarely registered births. Therefore, they could not prove the stringent requirements for citizenship.

The Bill was opposed fiercely in Parliament by the Ceylon Indian Congress, which represented the Indian Tamils, and the Sinhalese leftist parties. The bill was also opposed by the All-Ceylon Tamil Congress, which represented the Ceylon Tamils, including its leader G.G. Ponnambalam.

The Bill was passed by Parliament on 20 August 1948 and became law on 15 November 1948, just 285 days after Ceylon gained independence from Britain. Only about 5,000 Indian Tamils qualified for citizenship. More than 800,000 people, about 11% of the population, were denied citizenship and made stateless. After opposing and voting against the Bill, G.G. Ponnambalam became a Minister in Senanayake's cabinet on September just two weeks later. Obviously, Ponnambalam was negotiating with Senanayake for a portfolio behind the back of a section of the ACTC.


In 1949 the Ceylon Parliament passed a different and subsequent act called Indian and Pakistani Residents (Citizenship) Act No.3 of 1949 whose outward purpose, again, was to provide means of obtaining citizenship for the Indian Tamils. But in reality, the conditions imposed by the Act were such that they discriminated against the Indian Tamils. The Act granted citizenship to anyone who had 10 years of uninterrupted residence in Ceylon (7 years for married persons) and whose income was above the stipulated level. Again, this was an impossible task for most Indian Tamils. They had a habit of periodically returning to India, thereby interrupting their residence in Ceylon, and most could not meet the income qualification. Only about 100,000 Indian Tamils qualified for citizenship under this Act.

Later in 1949 the Ceylon Parliament passed the Ceylon (Parliamentary Elections) Amendment Act No.48 of 1949 which stripped the Indian Tamils of their franchise. Seven of the 95 MPs elected at the 1947 general elections were Indian Tamils. Upcountry Indian Tamils influenced the result in 20 other constituencies, very often voting for the opposition Sinhalese leftist parties. None of the 95 MPs elected at the 1952 general elections were Upcountry Indian Tamils.

G.G. Ponnambalam and 3 other ACTC members voted in favour, but was sternly opposed by S.J.V. Chelvanayakam, Deputy leader of the party and C.Vanniyasingam (Kopay) and S. Sivapalan (Trincomalee). This betrayal of the Hill Country Tamils by Ponnambalam was the last straw that broke the camel's back and resulted in the ACTC splitting down the middle and the formation of the ITAK.

The Soulbury Commission was officially boycotted by D.S. Senanayake, but he worked behind the curtains to sell the draft constitution authored by Sir Ivor Jennings for the Board of Ministers. D.S. Senanayake wanted to avoid a repetition of the acrimonious debate before the Donoughmore Commission where there had been a spiralling of 'communal' demands as accusations and denunciations (which) provoked counter-accusations until communal tension reached in outbreak of violence.

In the 1930s, the leader of the Ceylon Tamils was G.G. Ponnambalam. The very first communal riots between Sinhalese and Thamil took place in Nawalapitiya in 1939. He rejected the Sinhala identity camouflaged as Ceylonese identity and described himself a proud Dravidian. The Mahavamsa has, especially in modern Sri Lanka, acquired a significance as a document with a political message. The Sinhalese majority often use Mahavamsa as a proof of their claim that Sri Lanka is a Buddhist nation from historical time.



George Turnour's translation of the Mahavamsa in 1838 helped establish it as Sri Lanka's original historical text and contribute to the belief among both the colonizers and the colonized that the Sinhalese race had an unbroken magnificent past. British writers and later Sri Lankan writers contributed to this belief due to the way in which they narrated the history of Sri Lanka.

Although Senanayake had consistently supported the Indian Tamils their citizenship under less exacting conditions as early as 1923, and as late as 1941 in the Indo-Ceylon talks, this change of attitude was a reaction to the increasing agitation of the Marxist trade-unionists whose power was misjudged by the colonial administration as well as most politicians of that era. The Soulbury commission had also recommended a "status quo" with regard to Indian workers, but left the question of nationality (also the official language) to the new parliament.

D.S. Senanayake and his Board of Ministers since they had other plans up their sleeves. To hoodwink the Soulbury commission and the Tamil representatives D.S. Senanayake spoke in terms of Ceylonese citizens and not Sinhalese or Tamil citizens.

Just before the vote on Ceylon Independence Act, D.S. Senanayake rhetorically posed thus: "Do you want to be governed from London or do you want, as Ceylon, to help Ceylon? On behalf of the [Ceylon National} Congress [founded by Sir Ponnambalam Arunachalam in 1919] and on my behalf, I give the minority communities the sincere assurance that no harm needs you fear at our hands in a free Lanka". This turned out to be empty rhetoric when he enacted the Ceylon Citizenship Act within 285 days after independence. (To be continued)



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1069



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கந்தளாய் சிவன்கோவில் திருகோணமலை

*" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்*
*தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்*
*சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே*
*வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே. "*

மனித வளர்ச்சியிலே ஆன்மீகத்தை வளர்க்கும் வழிமுறைகள் பல பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆன்மீகம் உட்பட அனைத்திற்கும் அடிப்படையானது அன்பு. அத்தகைய அன்பைப் பிரதானமாகக் கொண்டு அறத்தைப் பின்பற்றுவோராக மக்கள் விளங்குகின்றனர். அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டது ஆன்மீகம். ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிகோலும் கோட்பாடுகளைக் கொண்டனவாக ஆலயங்கள் காணப்படுகின்றன.

ஆலயங்களையும், அங்கு அருள் நிறைந்த விக்கிரகங்களையும் எழுந்தருளச்செய்து, ஆலய வழிபாட்டின்மூலம் ஆன்மீகத்தை வளர்த்து வருவது காலங்காலமாக நடைபெறும் நிகழ்வாகத் தொடர்கின்றது. மக்கள் மிகப் பெரிய அளவிலே பொருட்செலவு செய்து வழிபாடு செய்து வருகின்றனர். ஆலயங்களோடு தொடர்புடைய வழிபாட்டுச் சடங்குகள், விரதங்கள், விழாக்கள், கொண்டாட்டங்கள், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், மனித மன உணர்வுகள், கலைகள், கதைகள், நம்பிக்கைகள் எனப் பல்வேறுபட்ட கூறுகள், மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைகின்றன. தற்காலத்திலே அல்லலுறும் மக்களை ஆதரிக்கும் மனிதநேயப் பணிகளையும், ஆலயங்கள் ஊக்குவிக்கின்றன. இவ்வாறான ஆலயங்களிலே இடம்பெறும் விழாக்களும் விரதங்களும் மக்களின் மன ஈடேற்றத்திற்கும் துணை புரிவனவாகக் காணப்படுகின்றன.

கந்தளாய் பிரதேசத்திலே சோழமன்னர்களால் கட்டப்பட்ட பல சிவாலயங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தும், மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டபோதிலும் காலத்தின் நியதியாக கந்தளாய் சிவன் கோவில் மீண்டும் எழுச்சிபெற்றுக் காணப்படுகின்றது. திருகோணமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் தற்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் விரதமாகிய கேதாரகௌரி விரதம் அல்லது கேதாரேஸ்வர விரதம் குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது இவ்விரதம் சிவாலயங்களிலும், சக்தி எழுந்தருளியுள்ள ஆலயங்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. கேதாரகௌரி என்ற பெயர்க்காரணத்தினால் இவ்விரதத்தினை அனைவரும் சக்திக்குரிய விரதமென்றே கருதுகின்றனர். இவ்விரதம் சிவனுக்குரிய விரதமாகும். இமயமலைச் சாரலிலுள்ள கேதாரநாதர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள கேதாரேஸ்வரப் பெருமானை, இத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரி அம்பாள் வழிபட்டு விரதமிருந்தமையால், இவ்விரதத்திற்கு கேதாரகௌரிவிரதம் என பெயர் ஏற்பட்டது. இவ்விரதத்தினை கேதாரேஸ்வர விரதமெனவும் குறிப்பிடுவர். இவ்விரதத்தினை சிவன் கோயில்களிலும், சக்தி கோயில்களிலும் பயபக்தியோடு கடைப்பிடிப்பர். இருபத்தியொரு நாட்கள் கடைப்பிடிக்கப்படும் விரதமாக இவ்விரதம் காணப்படுகின்றது.

கேதாரகௌரிவிரதம் பெண்களைப் பெருமைப்படுத்தி சக்தியின் வல்லமையை உலகுக்கு உணர்த்தும் உன்னத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. "சிவமின்றிச் சக்தியில்லை சக்தியின்றிச் சிவமில்லை" என்ற உலக இயக்கத்தை, அர்த்த நாரீஸ்வர வடிவத்தின்மூலம் உலகுக்கு உணர்த்தியது இந்துமதம். இவ்வடிவம் ஏற்பட்ட வரலாற்றோடு கேதாரகௌரி விரதம் தொடர்புபட்டுள்ளது. கேதாரகௌரி விரதத்தை அன்னை பராசக்தி கடைப்பிடித்து சிவனுடன் சக்தியும் இணைந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தைப் பெற்றார் என புராண வரலாறு உரைக்கின்றது. இதன் தத்துவத்தினை விளக்க பல்வேறு புராணக்கதைகள் காணப்படுகின்றன. இவ்விரதம் ஈழநாட்டிலும், புலம்பெயர்ந்த நாடுகளின் சிவாலயங்களிலும், சக்திஆலயங்களிலும் பெரிதும் கடைப்பிடிக்கப் படுகின்றது. எது எவ்வாறாயினும் "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்ற தத்துவம் கூறப்பட்டபோதிலும், வாழுகின்ற வாழ்க்கை செம்மையாக இடம்பெற நம் முன்னோர் தத்துவங்களை இலகுவாக்கி, மனிதகுலம் ஈடேற ஆலய வழிபாட்டோடு பூசை வழிபாடுகளையும், விரதங்களையும், விழாக்களையும் ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான சிவவிரதம் கந்தளாய் சிவன் கோயிலிலும் மிகச்சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

அத்தோடு மனிதகுலம் மேன்மையுற பல வழிமுறைகளை எமது முன்னோர் வகுத்துச் சென்றுள்ளனர். இவற்றுள் பலவும் ஆலயங்களை மையமாகவைத்தே வகுக்கப்பட்டுள்ளன. மனிதகுலம் பின்பற்றும் ஆன்மீகப் பண்பாட்டு முறைகள், வழக்காறுகள், சுகாதார பழக்கவழக்கங்கள் அனைத்தும் ஆலயங்களை மையமாகக் கொண்டே திகழ்கின்றன. இவற்றின்மூலம் மனித மனங்களைப் பண்படுத்தி, மனிதநேயத்தை உணர்த்தி, இறையுணர்வைத் தூண்டும் களங்களாகவும் ஆலயங்கள் அமைந்துள்ளன.

திருகோணமலையில் கந்தளாய் என்ற பிரதேசம் காணப்படுகின்றது. இவ்வூர் திருகோணமலைப் பட்டினத்திலிருந்து கொழும்பு கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. ஈழத்தின் மிகப் பெரிய விவசாயப் பிரதேசங்களில் ஒன்றாகக் கந்தளாயும் கணிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பின்னணிகள் பலவற்றைக் கொண்ட இவ்வூருக்கு கந்தளை, கண்தளை, கந்தளாய் எனப் பல்வேறு பெயர்களும் காணப்படுகின்றன. காரணப்பெயர்களாக விளங்கிய இவ்வூரின் பெயர்கள் பின்னாளில் திரிபுபட்டு, பல பெயர்களால் அழைக்கப்பட்டது. தமிழ்மக்களின் விவசாயப்பிரதேசங்கள் அழிக்கப்பட்டு, திட்டமிட்ட குடியேற்றங்கள் பலவும் நிகழ்ந்த பிரதேசமாகக் கந்தளாய்ப்பிரதேசம் விளங்கி வருகின்றது. இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களின் காரணமாகக் கந்தளாயின் பண்டைய வரலாறு மறைக்கப்பட்டும், மறைந்தும் வருகின்றது.

- வளரும்...

SV.Varman's
MIDI MELODIES
music studio
Professional Musicians With Digital Technology

# விஜயதசமி விழா

# புதிய இசை வகுப்புக்கள்

எதிர்வரும் விஜயதசமி தினத்தை முன்னிட்டு
**23-Oct-2023 Monday** அன்று **(6 to 11) pm**
புதிய இசை வகுப்புகள் ஆரம்பம்.

- Keyboard
- Drums
- Guitar
- Vocal (Carnatic music)









Place:
**605**-Middlefield,Unit-**14**
M1V 5B9
(Finch / Middlefield)
கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில்

**For further information**
*SV.Varman*
(Music Director & Sound Engineer)
Cell- **416-579-6059**

# இவ்வார ராசிபலன்

**13-10-2023 வெள்ளி தொடக்கம் 19-10-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** தனவரவுகளை சந்திக்கும் வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மாற்றுத்தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிட்டும். உறவினர் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தொல்லைகள் ஒழியும். பொறாமைகள் விலகும். பொருள் சேர்க்கை உண்டு. மனஅமைதி குறையும். அரசாங்க அனுகூலம் கூடும். எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் பெருகும். தாய் வழி உறவு லாபம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான காலம். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு விலகும். சொல்லில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து வந்து சேரும். விபரீதபோக்கு மாறும். உடல்சோர்வு ஏற்படும். பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,C




**ரிஷபம்:** பாதிப்புக்கள் அகலும் வாரம். குடும்ப சந்தோஷம் கூடும். புது முயற்சி பலன் தரும். வேலைபளு அதிகரிக்கும். எண்ணம் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் சிறக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவுகளால் அலைச்சல் உண்டு. மனோபயம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. உடல் அசதி ஏற்படும். சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு குறையும். பயணம் அனுகூலம் தரும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வேலைப்பளு குறையும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். வீடு தேடி வெற்றி வரும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். நண்பர்களால் நன்மை உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொல்லைகள் அகலும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சமூக சூழ்நிலைகள் ஏற்படும். கடவுள் பிரச்சனை கைகொடுக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சிக் கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். சொத்துக்கள் சேரும். அரசியலில் லாபம் உண்டு. உளுந்து தானம் சிறந்த பலன் சேரும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். புதிய முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**கடகம்:** சிந்தனைகள் அதிகரிக்கக் கூடிய வாரம். துன்பங்கள் அகலம். உடல்நலம் சிறக்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொருளாதார நிலை உயரும். மங்கையருக்கு திருமணம் கைக்கூடும். கல்வியில் அக்கறை தேவை. கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வியாபாரம் வளம் பெருகும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். பூமியால் நன்மை உண்டு. பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களின் உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். புதுமையை விரும்புவீர்கள். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபச்செய்திகள் வரும். காதல் கைக்கூடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். நிம்மதி பெருகும். கடன் சுமை குறையும். கல்வியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,9,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** புதுமைகள் நிகழ்த்தும் வாரம். தாராளமான வருமானம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச்செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். கடன் தொல்லைகளில் இருந்து விடுவு பெறுவீர்கள். கையிருப்பு கரையும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழையக் கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். மனக்கசப்பு ஏற்படும். காதலர்களுக்குள் சண்டைகள் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. தங்க நகைகள் சேரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். செலவுகள் அதிகம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புகழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அரசியலில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**கன்னி:** வகையான வாழ்வு அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சூழ்நிலைகள் ஊடுருவும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். மனச்சுமை குறையும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தீரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். வழக்குகளில் வெற்றி தரும். வயிறு உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. குடும்ப பிரச்சனை தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். வழக்குகளில் சாதகமாகும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். இலக்கிய ஆர்வம் கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**துலாம்:** சிந்தனையில் முதிர்ச்சி பெருகும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புகள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பால் தானம் பாவம் போக்கும். தாய், தந்தை உதவி உண்டு. அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தீரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,P




**விருச்சிகம்:** மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமாக சூழ்நிலை அகலும். தொழில்போட்டி அதிகரிக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலம் கவனம் தேவை. பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கருத்து வேறுபாடுகள் தோன்றும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். திக்கற்ற நிலை மாறும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். பயணத்தில் கவனம் தேவை. மாற்று இன நட்பு பெருகும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடி தொழில் முன்னேற்றம் தரும். நலம் காணும் வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை சேரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். இடையூறு அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மேல்மலையனூர் அங்காளம்மன்
அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M

(தொடர்ச்சி 26 பக்கம்)

# அன்பின் தொனி - 708

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஒப்புகொடுத்தல் (அற்பணிப்பு)** Commitment
**கனி கொடுக்கிற கிறிஸ்தவனுக்கான ஏழு வகையான ஒப்புக்கொடுத்தல்**
Seven types of Commitments of Highly Fruitful Christians

**6. தேவநோடு வசனததிலும், ஜெபத்திலும் செலவிடும் நேரம் -** Daily spending time with God in the Word and prayer

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக, இதில் எழுதியிருக்கிறவைகளின்படி யெல்லாம் நீசெய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். நான் உனக்குக் கட்டளையிடவில் லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே, நீபோகும் இடமெல்லாம் உன் தேவனாகியகர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். **- யோசுவா 1: 8-9**

நீங்கள் என்னிலும்,என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்தகனிகளைக் கொடுப்பதனால் என் பிதாமகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். **- யோவான் 15: 7-8**

**7. கடவுளோடு நெருங்கி இருக்கும் ஒப்புவிக்கப்பட்ட ஐக்கியம் -** Keeping Fellowship with God

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கிநம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். **- 1 யோவான 1: 7-9**

**8. மேலதிக செயற்பாடுகள் -** Additional Activities


**தனிப்பட்ட ஜெபம், குடும்ப ஜெபம், ஐக்கிய ஜெபம், இரவுவிழிப்பு ஜெபம், உபவாச ஜெபம், வேதவசனத்தை வாசித்தல், படித்தல், தியானித்தல், மனனம்செய்தல், குறிப்பெழுதுதல், சபை கூடுதல். வீட்டுக் கூட்டம்**

**இயேசு எப்படி சீஷர்களை அழைத்தார்?**

அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். **- மத்தேயு 4: 17- 22**

**தொடரும்...**

# ஒரிசா பாலு அவர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மரியாதை கலந்த வணக்கங்கள்




தமிழரின் தொன்மையை உலகப் பரவலை ஆய்வுசெய்த தமிழறிஞர் ஒரிசாபாலு அவர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மரியாதைகலந்த வணக்கங்கள்.

தமிழினத்தின் தொன்மை என்பது கல்வெட்டுக்களிலும், அகழாய்வுகளிலும் வெளிப்படும் காலமிது. தரையில் கிடக்கும் இந்ததடயங்களைவிட ஆயிரக்கணக்கான தடயங்கள்கடலில் மூழ்கிப்போயுள்ளது என்பதை கடலாய்வின் வழியாக வெளிக்கொண்டு வந்து தமிழின் தமிழரின் தொன்மையை உலகறியச் செய்தவர் ஒரிசா பாலுஎன உலகால் அறியப்பட்ட பாலசுப்பிரமணியன் அவர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை கடல்கோள் நிகழ்ந்து வருகின்றது என்பதையும், ஒவ்வொரு கடல்கோளிலும் சுமார் ஒரு கிமீநிலத்தை கடல் விழுங்கி விடுகின்றது என்பதையும், தமிழகக் கடலுக்குள் 30 கிமீ வரை மனிதக்கட்டுமானங்கள் மூழ்கிக் கிடப்பதையும் ஆய்வுரீதியாக நிறுவியவர் ஒரிசா பாலு அவர்கள்.

இவரது ஆய்வுகள் தமிழரின் தொன்மையை தமிழரின் கடலாதிக்கத்தை, தமிழரின் வணிக மேலாண்மையை, தமிழரின் வானியல் அறிவை உலகம் அறியச் செய்தன. தமிழ் சமூகம் இதற்காக அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. அவரதுமறைவு தமிழ் ஆய்வுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்க அமர்வு ஒன்றில் இவர் உரையாற்றியதை இந்நேரத்தில் நினைவு கூர்கின்றோம். அவரை இழந்த அவரது குடும்பத்தினரதும், உறவினர்களினதும் கரங்களைப்பற்றிக் கொள்கின்றோம். அவரது மறைவு உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அவரது ஆய்வினை முன்கொண்டு செல்ல தமிழர்கள் முனைவது ஒன்றே அவருக்குதமிழ்ச் சமூகம் ஆற்றும் நன்றிக் கடனாக இருக்கும்.



விஸ்வநாதன் உருத்திரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்









## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** திட்டமிட்ட செயல் வெற்றி பெறும் வாரம். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். கிருபைகள் சேரும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. குடும்ப பாசம் அதிகரிக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வெளியூர் பயணம் நன்மை தரும். திட்டங்கள் எளிதாகும். இசை ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**மகரம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடல் தொல்லை நீங்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணியக் காரியம் கைக்கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வெளியூர் பயணம் உண்டு. வீண் செலவு ஏற்படும். நெருக்கடிகள் குறையும். விவேகம் வெளிப்படும். வாகனச்செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். விவசாயம் பலன் தரும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். நன்மதிப்புக் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். அணிகலன் சேரும். யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பதற்றம் குறையும். நிதி பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. வெறுப்புக்கள் அகலும். சிறப்புக்கள் சேரும். பயணம் அனுகூலம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கும்பம்:** நல்லோர்களின் நட்பு கிட்டும் வாரம். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனபயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி ஏற்படும். பொறுமையைக் கையாள வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். கல்வியில் ஈடுபாடு குறையும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சிறக்கும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**மீனம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்கைள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். புதிய வேலை முயற்சிகள் பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். யோகமான காலம். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். வியாபாரம் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். கலக்கமான மனநிலை காணப்படும். கௌரவத்தில் கவனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். நல்லச்செய்திகள் நாடி வரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. செல்வாக்கு உயரும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்பட்டு விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H

## கடந்தவையும் கடப்பவையும் – (74)

நுழைவாயில் முன்னால் நின்றிருந்த மாடொன்று
விரைவாக விலகி வழிவிடவே - நாங்களும்

மெதுவாக உள் நுழைந்தோம் - அங்கும்
அதிக நேரக் காத்திருப்பு நீடிக்க - இலையானும்

வந்தமர்ந்து முகர்ந்து பார்த்துச் சென்றிடவே
இந்த இடம் வேண்டாமென எழும்புகையில்

என்னவேண்டும் என்றபடி ஒருவர் வந்து - மிக
தன்மையாகக் கேட்ட போது

திரும்பப் போகும் எண்ணம் மாறிப்போக - வாங்க
விரும்புவதைச் சொல்லிவிட்டு காத்திருந்த போது

கனக்க எல்லாம் வருகிறது நினைவில்

முன்னைய காலங்களில் கடைகளுக்கு
உள்ளேயும் வெளியேயும் நல்லாகத்தானிருக்கும்

மாலைநேரம் மஞ்சள் நீர் தெளித்து
நெஞ்சை அள்ளும் வாசனையில் சாம்பிராணி

கல்லாப்பெட்டி முன் வெள்ளை வேட்டிக்காரர்
நல்லாகத்தான் இருப்பார் பார்ப்பதற்கு - அன்று

சின்னப்பிள்ளைகள் ஆனாலும் மனத்திலே ஆயிரம்
எண்ணங்கள் கல்யாணிக்குப் போகும் போது

உள்ளே நுழைந்து விட்டால் இரண்டுபுறக் கண்ணாடியும்
கொள்ளை அழகில் அடுக்கடுக்காய் ஆளைக்காட்டும் - பின்

குடிப்பதற்கு குளிர்ச்சியாக சர்பத் வரும்
சுடச்சுட ரோல்சும் தான் - அதை

தொட்டு உண்ணும் சோசும் கூட
மெத்தப் பெரும் சுவையே அன்று - பின்

கடைகளைச் சுற்றி வந்து மறுபடியும்
நிறையவே பழங்கள் போட்ட ஸ்பெஷல் ஒன்றும்

அதுமுடிய இனிய சுவை பீடாவோடு
நிறைவுபெறும் அன்றைய யாழ்ப்பாணப் பயணம்

பல்கலையில் இருந்தபோதும் நண்பிகளின் பிறந்தநாளை
நல்லபடி கொண்டாடிய இடமும் அது

எவ்வளவோ சனக்கூட்டம் ஆனாலும் சுற்றுப்புறம்
அவ்வளவு தூய்மையாகத் தெரிந்தது அன்று - பின்பு

போரினால் பெருமளவு பொலிவிழந்து - யாரும்
போகாத சூனியப் பிரதேசமாயும் இருந்ததுதான் - அங்கு

ஆங்காங்கு தெருநாய்கள் அன்றாடம் உணவுக்காய்
திண்டாடித் திரிந்ததையும் கண்டதுண்டு போர்க்கால படப்பிடிப்பில்

அன்றைய இடிந்து போனகட்டடங்களோ - அன்றி
கற்குவியல்களோ இன்று இல்லை - ஆனாலும்

என்றுமே மறைந்துபோகா அக்கதைகளைச்
சுமந்தவராய் பலர் உள்ளார் - அவற்றையெல்லாம்

மறந்தவராயும் சிலரும் உள்ளார் - வாழ்நாளில்
மறுக்கவே மாட்டேன் என்றவனும் உள்ளான் - அவன்

அழைக்கப்பட்டான் ‘உடப்பு’ என
‘பிழைக்கவந்தவர் அல்லர் நாங்கள்’ என்றவன்

உறைப்பாக என்னைப் பார்த்து - சொல்லுகிறான் பேராவில்
மறைப்பாய் எதையோ மனதில் வைத்து, - புரியவில்லை

மூன்றாவது வருடத்தில் இருந்தாலும்
அன்றவர்க்கு புதுமுகம்நான் என்றதுவும் மனதில்வர

பகடிவதையோ இதுவும் என்றதாக ஒருநினைப்பு - ஆனாலும்
பகடியாகத் தெரியவில்லை உடல்மொழி

‘உம்மாவோடும் வாப்பாவோடும்...’
என்றவன் நீட்டிக்கொண்டு போனான் நீளமாக

அப்பத்தான் புரிந்தது அவனது பக்கக்கதை
இப்ப எனது பக்கம் பதில்கூற ஒரு வாய்ப்பு

நீண்ட அமைதியின் பின் தொடருகிறேன்
‘ஆண்டுகள் பலவல்ல ஐந்துதான் வித்தியாசம்

உடைமையை இழந்தவர் மறுபடி தேடிடலாம் - ஒருநாள்
இடப்பெயர்வால் எத்தனை இன்னல்கள்

உயிர்கள் பலதினைத் தொலைத்தோம்
உயிரற்ற உடல்களை கைவிட்டே வந்தோம்

குழந்தைகளும் முதியவரும் பட்டுவந்த அல்லல்களை பார்க்வில்லையே நீங்கள்’
என்றிடவே

‘புரிகிறது ஆனாலும் மறவாது’ என்றவனாய்
எழுந்து போனான்.

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION

## To Know About All Your Mortgage Needs Contact Us Today




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524






26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்



இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524



உதயம் 1436 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 13, 2023


# ஸ்காபுறோவில் இயங்கிவரும் "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" வெள்ளி விழா ஆண்டு கொண்டாடப்பெற்றது

ஸ்காபுறோவில் ஸ்ரீமதி ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களைக் குருவாகவும் நிறுவனராகவும் கொண்டு இயங்கிவரும் "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" வெள்ளி விழா ஆண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சீனக் கலாச்சார மண்டபத்தில் கொண்டாடப்பெற்றது

பிரதம விருந்தினராக சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)






# சுவிஸில் நடைபெற்ற மணிவிழாவில் பூநகரி பொன்.முருகவேள் தமிழ் இலக்கியச் சங்கம் வழங்கிய "நிறை தமிழ்" விருதுபெற்றார்

யாழ்ப்பாணம் பூநகரி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அண்மையில் அவர்தம் மணிவிழாவினைச் சுவிஸ் தலைநகர் பேர்னில் பெருவிழாவாக கொண்டாடயவருமான பொன்.முருகவேள் அவர்கள் அவர்தம் நண்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இணைந்திருக்க மதிப்பளிக்கப்பெற்றார். அது ஒரு பிறந்தநாள் விழாதான்,ஆனால்தனிமனிதவிழாவாக இருக்கவில்லைமாறாக வள்ளுவரைப் பல்லக்கில் சுமக்கும் மணமுள்ள மணிவிழாவாகக்குறளேற்றிற்று.

மலேசியாவிலிருந்து வருகை தந்த தமிழ்ச் சொல்லாட்சியர் திரு.இரா.திருமாவளவன் திரு.திருமதி முருகவேள்தம்பதிக்கு தமிழ் முறைப்படி மணிவிழாவினை இனிதே நடாத்தி வைத்தார்.

(உள்ளே விபரமான கட்டுரை 18ம் பக்கத்தில்)

# கனடாவின் ஸ்காபுறோ நகரில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "நாத வீணா மன்றம்" நடத்திய வருடாந்த கலை விழா – 2023

கனடாவின் ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களை நிறுவனராகவும் குருவாகவும் கொண்டு இயங்கிவரும் ஸ்காபுறோ "நாத வீணா மன்றம்" நடத்திய வருடாந்த கலை விழா-202 நேற்று சனிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழ் இசைக் கலாதமன்றத்தில் நடைபெற்றது.





கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் இந்த "நாத வீணா மன்றம்" இதுவரை நூற்றுக்கணக்கான மாணவ மாணிகளை உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

நேற்றைய விழா நிகழ்ச்சிகளை ரைம் எவ்எம் வானொலி அறிவிப்பாளர் இளங்கோ மற்றும் சந்தியா ஆகியோர் சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள்.

விழாவின் ஆரம்பத்தில் மன்றத்தில் கனிஸ்ட பிரிவு மா ணவ மாணவிகள் தங்கள் திறன் காண் வீணை இசையை வழங்கினார்கள்.

# சுவிற்சலாந்து எழுத்தாளரும் பேச்சாளருமான "கல்லாறு சதீஸ்" உதயன் பல்சுவைக் கலைவிழாவில் கலந்து கொள்கிறார்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கல்லாறு கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் சுவிற்சலாந்து வாழ் தொழிலதிபரும் எழுத்தாளரும் பேச்சாளருமான "கல்லாறு சதீஸ் கனடா உதயன் பல்சுவைக் கலைவிழாவில் கலந்து கொள்ள வநதுள்ளார்.

எதிர் வரும் 15-10-2023 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ள மேற்படி உதயன் பல்சுவைக் கலைவிழாவின் பிரதம விருந்தினராக அவர் அழைக்கப்பெற்றுள்ளார்.

இந்த விழாவில் பிரபல தென்னிந்திய திரைத்துறை பாடகரும் பொன்னியின் செல்வன் திரைப்படப் பாடல் மூலம் புகழ்பெற்றவருமான வி. எம். மகாலிங்கம் "ஆரோசை" இசைக் குழுவின் பின்னணி இசையில் இனிய பாடல்களை வழங்கவுள்ளார். அனுமதிச் சீட்டுக்களுக்கு 416 732 1608






# An Evening With MP Salma Zahid, Federal Member for Scarborough Centre Riding

## ஸ்காபுறோ மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களுடனான ஒரு மாலைப் பொழுது

மேற்படி வைபவம் கடந்த புதன்கிழமை மாலை ஸ்காபுறொவில் அமைந்துள்ள "கென்னடி கொன்வென்சன் விழா மண்டபத்தில்" நடைபெற்றது.

சுமார் 400 அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் அங்கு கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களின் உரையை செவிமடுத்தனர்.



அழைக்கப்பெற்ற தமிழ் பேசும் அன்பர்களும் ஆதரவாளர்களும் அங்கு வருகை தந்து சல்மா சாகிட் அவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். அவர்களில் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி. அவரது பாரியார் மற்றும் ராம் ராம் குமார் உட்பட கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்களும் கலந்து கொண்டனர்.